விலை: 60.00
பக்கங்கள் - 24

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
valampurii

சங்கு 25 E-mail: valampurii@yahoo.com,

ஒலி 257 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (01.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**"நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் – காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல – இல்லாதவனின் வலியைப் புரிந்து கொண்டதால்."**

# விற்பனைக்கு

1. யாழ்.வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக மூன்று கடைகளும்
2. யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் மூன்று கடைகளும்
3. யாழ்.பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் ஆறு பரப்புக் காணியும் நான்கு பரப்புக் காணியும்
4. யாழ்.அரியாலை பூம்புகார் வீதியில் நூறு ஏக்கர் காணியும்
5. யாழ்.அச்சுவேலியில் நூறு பரப்புக் காணியும்
6. யாழ்.திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் ஐந்து பரப்புக் காணியும்
7. யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் ஐந்து பரப்புக் காணியும் மாடி வீடும்
8. யாழ்.கஸ்தூரியார் வீதியில் நூறு அடி நீளமும் பதினாறு அடி அகலமும் கொண்ட மாடிக் கடையும்
9. யாழ்.நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் பத்துப் பரப்புக் காணியும்
10. யாழ். K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் ஆறு பரப்பு, நான்கு பரப்புக் காணியும்
11. யாழ். உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் ஆறு பரப்புக் காணியும்
12. யாழ்.புதுக்காடு A9 வீதியில் நானூறு பரப்புக் காணியும்

விற்பனைக்கு உண்டு.

**T.P : 077 72 32 535**

**கனகசபை தர்மகுலசிங்கம்**

**இல.183, காலி வீதி, வெள்ளவத்தை.**

**இல.185, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

(1836)

# டொலருக்காகவே 13 ஐ அமுலாக்குவதாக தெரிவிக்கின்றனர் உதய கம்மன்பில

(கொழும்பு)

தேர்தல் செலவினங்களுக்காக பிரிவினைவாதிகளிடமிருந்து டொலர் பெற்றுக்கொள்வதற்காகவே ரணில், சஜித், அநுர ஆகியோர் வடக்குக்குச் சென்று 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினையை மூடி மறைக்கும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்குச் சென்று சிங்களவர்களின் நெருக்கடியில் இருந்து விடுதலை பெற அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக குறிப்பிடுகிறார்கள் என்றார். (ம-7)

## விற்பனைக்கு

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு முன் உள்ள வீதியில் 400 அடி தூரத்தில் 5 பரப்புடன் கூடிய Architect வடிவமைத்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. 3 பரப்புடன் வீடும், தனியாக 2 பரப்பு வெற்றுக் காணியாகவும் விற்கப்படும்.

**071 807 7282**

(1811)

## தச்சு வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு தச்சு வேலையாட்கள் உடன் தேவை. தங்குமிட வசதியும் நிரந்தரமான வேலையும் உண்டு. சம்பளம் 90,000/= வரை வழங்கப்படும்.

**ஆர்க் தளபாட நிலையம்**
**இல.35, கொட்டைக்காடு வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.(பஸ் டிப்போ அருகாமை)**

**T.P : 077 300 1763**

(1837)

நல்லூரான் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

DHL MoneyGram money transfer Ria WESTERN UNION WU

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
No.303, K.K.S Road, Jaffna. TEL : 076 315 6470

(C-1095)

# மரண அறிவித்தல்



மலர்வு 15 - 11 - 1980

உதிர்வு 30 - 08 - 2024

## தவக்குமரன் கலைச்செல்வி

அல்வாய் கிழக்கு, அல்வாய் ஈஸ்வரி வாசா பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவக்குமரன் கலைச்செல்வி அவர்கள் (30.08.2024) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கோபாலசாமி (புகையிரத நிலைய அதிகாரி) கோபாலசாமி பரமேஸ்வரி தம்பதியினரின் இளைய மகளும் வேலும்மயிலும் தவக்குமரன் அவர்களின் பாசமிகு மனைவியும் ஹரிணி, சங்கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சன் திருமாதவகௌரி மற்றும் கோபாலசாமி இளங்கோ ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆனந்தநடராசா இராஜேஸ்வரி அவர்களின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.09.2024 நாளை திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-1096)

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 - 01 - 1957

மறைவு 30 - 08 - 2024

## ஆறுமுகம் சண்முகநாதன்

தூதாவளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சண்முகநாதன் அவர்கள் 30.08.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆறுமுகம் - நல்லம்மா தம்பதியரின் அன்புமிகு மூத்த பிள்ளையும் யோகேஸ்வரி, செல்வராணி, கமலா, தேவகுமார், பிறேமானந்தன், காலஞ்சென்ற நகுலேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் திலிபன், திவ்யா, சங்கீதா, கிருசாந்தி, பிரசாந்த், திவாகர் ஆகியோரின் பாசமிகு அப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (02.09.2024) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொ.பே: 076 212 1396

(C-1097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 257 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (01.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வடக்கு மாகாண சபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

(சாவகச்சேரி)
வெகுவிரைவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதனூடாக மாகாணத்திற்கு சேவை வழங்குவோம் என ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று சாவகச்சேரித் தொகுதியில் இடம்பெற்ற 23



23

## இலங்கை தொடர்பான ஐ.நா தீர்மானத்தை

# மேலும் இரு வருடங்களுக்கு காலநீடிப்புச் செய்யுங்கள்


### 7 சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை நிறுவும் வகையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்வரும் கூட்டத் தொடரின்போது மேலும் இரு வருடங்களுக்குக் காலநீடிப்புச் செய்யுமாறு 7 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை தொடர் பில் ஏற்கெனவே நிறைவேற் றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்ட ஆணையை காலநீடிப்புச் செய்யுமாறுகோரி சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசியப் பேரவை, பிரான்சிஸ்கன் இன் டர்நெஷனல், மனித உரிமை கள் கண்காணிப்பகம், சர்வ தேச ஜூரர்கள் ஆணைக் குழு, இலங்கை தொடர்பான சர்வதேச நடவடிக் கைக்குழு மற்றும் 23

## நல்லூரானின் சப்பைரதம்



## வாக்குச்சீட்டு விநியோகம்

### 3ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)
எதிர்வரும் 03ஆம் திகதி உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு விநியோக நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இதனை முன் 23

### வவுனியா பிரப்பமடு பகுதியில்

## யானை தாக்கியதில் பெண் ஒருவர் மரணம்

(வவுனியா)
வவுனியா பிரப்பமடு பகுதி யில் யானை தாக்கியதில் பெண் ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாமடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரப்பமடு பகுதியில் வசிக்கும் 55 வயதுடைய் பெண் 23

## ஆட்சி மாறினாலும் ஐ.எம்.எப்புடனான உடன்படிக்கையில் பாதிப்பு இல்லை



### ஜே.வி.பி தலைவர் அநுர குமார

(கல்கிசை)
ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துட னான உடன்படிக்கைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தேசிய மக்கள் சக்தி யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல் கிசையில் 23

### பொதுமக்கள் மீதான

## வரிச்சுமையைக் குறைக்க தீர்மானம் - ரணில்



(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன்களை வழங்கிய 18 நாடுகளுடன் இலங்கை செய்துள்ள உடன் படிக்கைகளுக்கு 23

## நாடு முழுவதும் 734 பேர் கைது

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் மேற் கொள்ளப்பட்ட யுக்திய நட வடிக்கையின்போது 734 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது போதைப்பொருள் 23

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)
நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னம் தனது எரிபொருட்களின் விலைகளைத் திருத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி 344 ரூபாயாக காணப்பட்ட 92 ரக ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 12 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளுக்கு நீதிகோரி லண்டனில் போராட்டம்

(லண்டன்)


**புலம்பெயர் நாட்டு உறவுகளினால் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிகோரிய போராட்டம் நேற்று முன்தினம் லண்டன் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**




சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஓகஸ்ட் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகிய நேற்று முன்தினம் லண்டன் நகரில் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கோரிய பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நீதிகோரிய போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கான புலம்பெயர் லண்டன் வாழ் உறவுகள், இளைஞர்கள் கலந்து கொண்டதுடன் பலவந்தமாக மறைத்து வைத்திருக்கப்படும் காணாமலாக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இனப்படு கொலையாளியை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்து என காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிகோரிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு குறித்த போராட்டம் இடம்பெற்றது. (நி-299)



தமிழக இந்து அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் , செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு திருமுருகனுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். அண்மையில் பழனியில் நடைபெற்ற முத்தமிழ் முருகன் மாநாட்டின் போது இக் கௌரவிப்பு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை தர்மசாஸ்தா குருகுலம் வழங்கும் வீணை இசை நிகழ்வு இடம்பெறும். இதில் சோ. சுபானு, சி.கஜப்பிரியா, த.ஜனனி, ந.திலக்ஷி, சு.டினோதா, தி.தாரணி, பா. தரங்கினி, மிருதங்கம் சோ. சங்கர்ஷணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

7.15-8.05 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-சியாமளாங்கி கருணாகரன். வயலின்-சு. சுவர்ணாங்கி, மிருதங்கம்-க.சிவகுமார் முகர்சிங்-சிவ. சக்திதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறலை திசை திருப்பும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்

## சுட்டிக்காட்டுகிறார் சர்வதேச நெருக்கடிக்குழுவின் ஆய்வாளர்

(கொழும்பு)

**2000 ஆண்டு முதல் 2009 வரையில் தங்கள் உறவுகள் காணாமல்போனதாக 6047 பேர் மாத்திரமே முறைப்பாடு செய்துள்ளனர் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்திருப்பது தவறாக வழிநடத்தும் ஒரு நடவடிக்கையாகும் என சர்வதேச நெருக்கடிக் குழுவின் இலங்கை குறித்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.**



சமூக ஊடக பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த எண்ணிக்கை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய வெளிப்படைத் தன்மையற்ற அதிகாரத்துவ பொறிமுறைகளின் புள்ளி விபரங்களை அடிப்படையாக கொண்டிருக்கலாம்.

2000ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு என்பது 1970களின் பிற்பகுதியில் (இரண்டு தசாப்தங்களிற்கு முன்னர்) ஆரம்பித்த அரசாங்கத்திற்கும் தமிழ் போராளிகளிற்கும் இடையிலான கிளர்ச்சி, கிளர்ச்சி எதிர்ப்பு யுத்தத்தின் ஈவிரக்கமற்ற ஒரு சிறிய காலம் மாத்திரமே.

இந்தக் காலப்பகுதியில் பல ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல்போனார்கள்.

தங்கள் குடும்பத்தவர்களை காணவில்லை என முறையிட்ட 6047 பேரில் சிலர் அல்லது பலர் குடும்பத்தில் பலரை இழந்திருக்கலாம். எனவே காணாமல்போனவர்களின் எண்ணிக்கை காணாமல் போனவர்கள் குறித்த முறைப்பாடுகளை விட கணிசமான அளவு அதிகமாகயிருக்கலாம்.

பல தசாப்தங்களாக ஆணையங்கள், குழுக்கள் மற்றும் பல்வேறு பிற தகவல் சேகரிப்பு செயல்முறைகளுக்குப் பிறகு காணாமல் போனவர்களின் பல குடும்பங்கள் சோர்வடைந்துள்ளன, சலிப்படைந்துள்ளன, கோபமடைந்துள்ளன தாங்களாகவே இறந்துவிட்டன அல்லது பொலிஸ் மற்றும் இராணுவத்தால் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. இதனால் புகார் தெரிவிப்பவர்களின் எண்ணிக்கை குறைகிறது.

இடதுசாரி சிங்கள ஜே.வி.பியின் இரண்டு கிளர்ச்சிகளின் போதும் ஆயிரக்கணக்கானவர்கள் அரசபடையினர் துணை இராணுவ குழுக்களால் காணாமலாக்கப்பட்டனர் என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இவை குறித்து மிகச்சிறிய எண்ணிக்கையிலான வழக்கு விசாரணைகள் மாத்திரம் இடம்பெற்றுள்ளன. சில உண்மைகள் மாத்திரம் வெளிவந்துள்ளன.

நான்கு தசாப்தகால வன்முறைகளின் போது அனைத்து இனங்கள், மதங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஒரு சிலரின் தலைவிதி குறித்து கூட உத்தியோகபூர்வமான தீர்மானங்கள் எதுவும் வெளியாகவில்லை. அரசாங்கம் பொறுப்பேற்கவுமில்லை நீதி வழங்கப்படவுமில்லை.

பல தசாப்தங்களாக உண்மை மற்றும் பொறுப்புக் கூறல் குறித்த வேண்டுகோள்களிற்கு இலங்கை அரசாங்கங்கள் அளித்து வரும் மறுப்பு மற்றும் பொறுப்பை திசைதிருப்பும் பதிலையே இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் பேட்டியில் வழங்கியுள்ளார்.

காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்களும் இலங்கையர்களும் இதனை விட சிறந்த பதில்களிற்கு உரித்துடைய வர்கள் என அவர் தெரிவித்தார். (நி)

# இம்முறை தேர்தலுக்கு 15,000 வாக்குப்பெட்டிகள்

(கொழும்பு)

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 15,000 இற்கும் அதிகமான வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தில் தற்போது 25,000 வாக்குப் பெட்டிகள் உள்ளதாக தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டின் நீளத்திலேயே இந்த ஆண்டுக்கான வாக்குச் சீட்டு குறியிடும் தாள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


**மணமகள் தேவை**

1997. இந்து. திருவோணம். SOFTWARE ENGINEER,
பூர்வீகம்-வேலணை. வதிவிடம்-UK
மணமகன் பதிவு இல: 10920
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(1357)

**மணமகள் தேவை**

1995. இந்து. திருவோணம் DOCTOR,
பூர்வீகம்-மந்திகை. வதிவிடம்- யாழ்ப்பாணம்
மணமகன் பதிவு இல: 10259.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(1357)

**மணமகன் தேவை**

1995. இந்து. பூரம். DOCTOR,
பூர்வீகம்-நெடுந்தீவு. வதிவிடம்-யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 10663.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(1357)

**மணமகன் தேவை**

1985. இந்து. அவிட்டம். NURSE,
பூர்வீகம்-புங்குடுதீவு. வதிவிடம்-FRANCE
மணமகள் பதிவு இல: 10640.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(1357)


# தெற்கு அதிவேக வீதியில் விபத்து

## ஒருவர் படுகாயம்






(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் 118 கிலோமீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் பின்புறத்தில் லொறி மோதியதில் காரானது வேகமாக சறுக்கிச் சென்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த பாதுகாப்பு வேலியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது காரில் இருந்த நபரொருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை வெளியீடு



(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெர முனவின் தேர்தல் விஞ்ஞாப னம் நாளை 2 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

நாமல் ராஜபக்ஷவினால் நாட்டிற்கு முன்வைக்கப்பட வுள்ள விஞ்ஞாபனத்தின் அசல் வடிவம் நேற்று முன்தினம் பிற்பகல் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன, நாட்டின் அபிவிருத்தி மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் அதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தனது விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும் தற்போதுள்ள சவால்களுக்கு எதிராக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதுடன், விஞ்ஞாபனத்தில் உள்ள திட்டங்கள் நிச்சயமாக செயற்படுத்தப்படும் எனவும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)



## நல்லூரான் திருவிழவை நான் கண்டு கொண்டேனே !

- கம்பவாரிதி இ. ஜெயராஜ்

### தேர்

தரையதனில் வருகிறதா? தலைமேல்த்தானா?
தடுமாறி பக்தரெலாம் தவித்து நிற்பார்
நிறைந்த அறிவுடையாரும் மயக்கம் கொள்வர்
நிகரில்லாத் தேரழகும் உள்ளம் தன்னை
விரைவினிலே கவர்ந்திடுமாம் விழிகள் சோர
வேறெதுவும் நினைக்கவிடா அழகால் ஈர்த்து
அறுமுகனும் அன்னையரோடசையும் காட்சி
அற்புதத்தை எவர் உரைக்கவல்லார் மண்ணில்.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

# பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் அதிக வாய்ப்பு:தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து 66 நாட்களுக்குப் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறித்த தகவலை தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படும் புதிய ஜனாதிபதி தனக்கு பொருத்தமான பாராளுமன்ற உறுப்பினர் இல்லை என நினைத்தால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு நடந்தால் ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட்டு 66 நாட்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் என சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் செம்டம்பர் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பரந்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொருளாதார வீழ்ச்சிக்கு ரணிலே பொறுப்பு

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அநுர



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பானவர் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொட்டாவை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் உரிய முறையில் பின்பற்றப்படாது என ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்கி றார்.

சிறு வயதில் தங்களது தாய்மார்கள், பேய்கள் வரும் என பயமுறுத்தி பிள்ளைகளுக்கு சோறூட்டுவார்கள்.

அதே பாணியில் தான் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டு மக்களைப் பயமுறுத்துகிறார்.

ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் வீழ்ச்சிக்குப் பொறுப்பானவர்.

நாட்டில் தற்போது என்ன நடக்கிறது. 21,000 தனியார் பேருந்துகள் உள்ளன. 18 பேர் அதற்கு உரிமை கோருகின்றனர்.

நாளாந்த தேவைகளுக்காக அவர்கள் தொழில் செய்ய வேண்டும்.

அவர்களை ஒன்றிணைத்துச் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# ராஜபக்ஷக்களால் வெற்றி பெறமுடியாது

## மகிந்தானந்த இடித்துரைப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க முன்வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் ராஜபக்ஷர்களால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாது என மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அளுத்கமகே, "ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த போதிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விட்டு ஒருபோதும் தான் விலகப் போவதில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க விரும்பாமல் நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக முன்னிறுத்தினார்.

ரணிலின் வெற்றிக்காக கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்துள்ளதால், 2024 ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அபார வெற்றியைப் பெறுவார்." என தெரிவித்தார் (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்


நாதம் 457

Viber 076 636 3378



# தமிழர்களை மையப்படுத்திய தேர்தல் விஞ்ஞாபனங்கள்

## தெற்கு அரசியலில் புதிய மாற்றம்





**“ வழமையாகத் தமிழ்த் தரப்புடன் ஒன்றிணையும் வேட்பாளருக்கு புலிச்சாயம் பூசும் தெற்கு அரசியல் களம் இம்முறை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் பலர் இன்னமும் தூக்க நிலையிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆயினும் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது பரப்புரையினை தீவிரப்படுத்தி உள்ளதனை அவதானிக்க முடிந்துள்ளது.

என்றுமில்லாதவாறு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா? இல்லையா? என்பதற்கப்பால் இம்முறை தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முன்னிற்பது ஓரளவு ஆறுதலைத் தருவதாக அமைந்துள்ளது.

வடகிழக்கு தமிழ் மக்களை முன்னிலைப்படுத்தும் தென்னிலங்கை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கு தமிழ் பொது வேட்பாளரின் வருகையும் ஒரு முக்கியமான காரணி எனலாம்.

எவ்வாறாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியவை என்னும் எண்ணம் தென்னிலங்கை அரசியல் தளத்தில் தோன்றியுள்ளது வரவேற்கவேண்டிய விடயம்.

தேர்தலின் பின் குறித்த வாக்குறுதிகள் வழமைபோன்று குப்பைத் தொட்டிக்குள் சென்று விட வாய்ப்புக்கள் அதிகமாயினும் குறித்த விடயங்களை நாம் கவனத்தில் எடுக்க வேண்டிய நேரம் இது.

அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் ஏலவே வெளியிடப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகி இருந்தது.

குறித்த மூவரின் தேர்தல் விஞ்ஞாபனமும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் வெளி வந்து இருப்பது தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் திட்டமாக மாத்திரம் பார்த்து விட முடியாது.

வழமையாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை கூறுபவர்களையோ அல்லது தமிழ் மக்களின் ஆதரவை பெற்றவர்களையோ எதிர்தரப்பினர் புலிகளுடன் ஒன்றிணைந்து நாட்டைப் பிரிக்க பார்க்கிறார்கள் என்ற எதிர் பிரசாரத்தை செய்வது வழமையாக கொண்டிருந்தனராயினும் தற்போது ஜனாதிபதி வேட்பாளர் பலர் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் மனம் மாற்றம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் “ரணிலுடன் நாட்டை வெற்றி கொள்ளும் ஐந்தாண்டுகள்” தேர்தல் விஞ்ஞாபனத்தில்,

■ காணாமல் போனோர் பிரச்சினைகள் தொடர்பில் நவாஸ் ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

■ உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

■ மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு புதிய பாராளுமன்றிடம் ஒப்படைக்கப்படும்.

என வடக்கு-கிழக்கை மையப்படுத்தியதான அவரின் விஞ்ஞாபனம் கூறி நிற்கிறது.

அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் முன்னிறுத்தப்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிந்துள்ளது. அதில்

■ 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும்.


■ அனைவரது கருத்துக்களும் கேட்டறியப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

■ ஆறு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

■ படையினர் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

■ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் உடன் அபிவிருத்தி செய்யப்படும்.

என்றவாறு அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகியுள்ளது.



அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சற்று உன்னிப்புடன் கையாள்வதாய் வெளியாகியுள்ளது. இதில்,

■ பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்கப்படும்.

■ வடக்கு-கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியான விசாரணை செய்யப்படும்

■ வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் உறுதிப்படுத்தப்படும்.



■ அரசியல் கைதிகள் அனைவரும் உடன் விடுவிக்கப்படுவார்கள்.

■ இனப்பரம்பலை மாற்றும் வகையில் ஏற்படுத்தப்படும் குடியேற்றங்களுக்குத் தடை.

என்றவாறு அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகியுள்ளது.



இம்மூன்று தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயங்கள் முக்கியம் பெற்று நிற்பதனூடாக தெற்குத் தலைவர்களின் மனமாற்றத்தை கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது.

தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் வெளியிடப்படாத நிலையில் தெற்கு அரசியல் தளத்தில் வடக்கு-கிழக்கை முக்கியத்துவப்படுத்தியுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் சிரத்தை கொள்வது காலத்தின் தேவை.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை பலவீனப்படுத்துவதாய் அமைந்து விடுமோ என்ற பயம் தமிழ் மக்களின் மனங்களில் எழுந்துள்ளது மறுக்க முடியாத உண்மை.

ஏனெனில் ஒருவேளை தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளும் குவியமடையாது போகுமாக இருந்தால் அதன் தாக்கம் மிகத் தீவிரமானது என்பதையும் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் கட்சி ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் பிரிந்து நின்று கொண்டு தமிழ் மக்களை ஒன்றிணையச் சொல்வது வேடிக்கைக்குரியது.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு தீர்வை வழங்கியாக வேண்டும் என்ற எண்ணத்தை தெற்கு அரசியல் தலைவர்களுக்கு உணர்த்திய பெருமை தமிழ் பொது வேட்பாளரையே சாரும்.

இன்னும் கெட்டுப்போகவில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கோ, அதை நடைமுறைப்படுத்துவதற்கோ பெரிய கால அவகாசம் இல்லையாயினும், எமது முடிவு மக்களைச் சென்றடையக் கூடிய சூழல் தற்காலத்தில் நிலவுகின்றது என்பதை இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூற முடியும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு


வரதன்


பத்மநாதன் ஐங்கரன்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

இருபாலை எக்ஸ்பிறஸ் தனியார் கல்வி நிலையத்தின் அதிபர் வரதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

எக்ஸ்பிறஸ் என்ற தனியார் கல்வி நிலையத்தை ஆரம்பித்து அதனை மிகவும் கட்டுப்பாடாக நடத்திய ஒரு சிறந்த நிர்வாகி. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். வலம்புரிப் பத்திரிகையின் ஆரம்ப காலம் தொட்டு ஊடகவியலாளராக இருந்த பத்மநாதன் ஐங்கரன் அவர்கள் விபத்துச் சம்பவ மொன்றில் காலமாகிவிட்டார் என்ற செய்தி மிகுந்த துயரத்தைத் தந்துள்ளது. சிறந்த ஆளுமை கொண்ட ஐங்கரனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** ஆலடியில் நாங்கள் அடிக்கடி பேசிய விடயம் யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்த இரண்டு நந்திகளையும் மீள வைக்க வேண்டும் என்று. அது இப்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது என்று அறிந்தோம்.

உண்மையில இதைச் சிறந்த முறையில செயற்படுத்தும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்களுக்கும் அவருடன் இணைந்து இந்தப் பணியை முன்னெடுக்கின்ற அனைவருக்கும் ஆலடி மாநாட்டில் நன்றி கூறிக் கொள்கின்றோம்.

இவ்வாறு விதானையார் கூறியதும் பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

எப்பவும் எங்கட அடையாளங்களைப் பாதுகாக்க வேணும்.நந்தி தமிழர்களின் அடையாளம்.

தவிர, பரமேஸ்வராக் கல்லூரியை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்கு ஈந்தளித்தவர் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள். எனவே அதனை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இந்த ஆண்டு (2024) ஐம்பதாவது நிறைவை அடைகிறது.

எங்கள் பல்கலைக்கழகத்தின் பொன்விழாவில் பல்கலைக்கழக நுழைவாயில் பொலிவு பெறுவது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

இவ்வாறு பண்டிதர் கூறிய கையோடு, எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிறைவை யொட்டி பரமேஸ்வராச் சந்தியில ஒருபெரும் நுழைவாயில் வளைவு அமைக்க வேண்டும்.

இது பற்றி முன்பும் பல தடவைகள் இந்த இடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம்.எனினும் அது இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பது கவலையைத் தருகிறது.

**சாத்திரியார்:-** அது சரி வாத்தியார், பரமேஸ்வராச் சந்தியில ஆரு அந்த நுழைவாயிலை அமைக்க வேண்டும் என்று நினைக்கிறியள்.

**வாத்தியார்:-** பரமேஸ்வராக் கல்லூரியின்ர பழைய மாணவர் சங்கம் அமைக்கலாம். இல்லாவிட்டால், பரமேஸ்வரா அறக்கட்டளை நிதியம் அதை நிர்மாணிக்கலாம்.

அதுவும் முடியாவிட்டால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர பொன்விழா ஆண்டில பட்டப் படிப்பை மேற்கொள்கிற அனைத்துப் பீட மாணவர்களும் ஒன்று சேர்ந்து நிதியைத் திரட்டி, பரமேஸ்வராச் சந்தியில யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பொன்விழா நுழைவாயில் வளைவை அமைக்கலாம்.

**சிறாப்பர்:-**வாத்தியார் சொல்லுறதும் சரிதான். இப்ப பாடசாலையில- பல்கலைக்கழகத்தில ஒன்றாகப் படித்த மாணவர்கள் ஒன்று கூடல்களை நடத்துகினம்.

அதில தாம் ஒன்றாகப் படித்த கல்வியாண்டு (Batch) மாணவர்களின் ஒன்று கூடல்கள், பாடசாலைகளுக்கு உதவுவதாக ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவிபுரிவதாக அமைந்திருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயம்.

இந்த வகையில தற்போது பட்டப் படிப்பை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில மேற்கொண்டு வருகின்ற மாணவர்கள், தாம் படிக்கின்ற காலத்திலேயே ஒன்றாக இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிறைவில பரமேஸ்வராச் சந்தியில ஒரு பெரும் நுழைவாயில் வளைவை அமைத்தால், அது காலா காலமாக நின்று நிலைக்கும்.

ஆகையால அதுபற்றி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சாதகமாகச் சிந்திக்க வேணும் எண்டு ஆலடியில கேட்டுக் கொள்கிறம்.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அதுசரி ஜனாதிபதித் தேர்தல் எப்படிப் போகுது, ஆருக்கு வெற்றிகிடைக்கிற வாய்ப்பு இருக்குதாம்.

**வாத்தியார்:-** இஞ்சே சாத்திரியார், எங்கட தமிழினம் இன்றுவரைக் கும் கந்தறுந்து காவடி எடுப்பதற்கு எங்களிட்ட ஒரு சரியான தலைமைத்துவமும் ஒற்றுமையும் இல்லாததுதான் மூல காரணம்.

அதிலும் சரியான நேரத்தில சரியான தீர்மானம் எடுக்காத காரணத்தால, எங்கட துன்பம் இன்னும் நிண்டு செல்லுது.

ஆகையால, இனி மேலாவது நாங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேணும். இல்லையெண்டால் எல்லாம் அம்போதான்.

**விதானையார்:-** வாத்தியார் சொல்லுறது உண்மை தான்.

அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதிப் பதவிக்குப் பொருத்தமற்றவர் என எங்கட விக்னேஸ்வரன் ஐயா சொன்னதாக ஊடகங்களில ஒரு செய்தி வெளிவந்திருந்தது.


என்னைப் பொறுத்த வரையில விக்னேஸ்வரன் ஐயா இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கக் கூடாது. அநுர பொருத்தமில்லை எண்டால், ரணிலும் சஜித்தும் பொருத்தம் எண்ட மாதிரி பொருள் படும்.

சிலவேளை,அநுர ஜனாதிபதியாக வெற்றி பெற்றால், நிலைமை என்னவாகும்.

அதிலும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிற விக்னேஸ்வரன் ஐயா! அநுர பொருத்தமில்லை. எண்டு கூறுவதினூடாகத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க வேணும் எண்டில்ல, பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளர்களும் இருக்கினம் எண்டு சொல்வது போலல்லவா அவற்ற கருத்து அமையுது.

**பண்டிதர்:-** என்னவா இருந்தாலும் இந்த நேரத்தில நாங்கள் சொல்லுகிற கருத்துக்களை நிதானமாகச் சிந்தித்துச் சொல்ல வேணும். இல்லை எண்டால் கரைச்சல் தான்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## அநுர பொருத்தமற்றவர் எண்டு விக்னேஸ்வரன் சொல்லக்கூடாது


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யார் ஆட்சிக்கு வந்தால் ஓரளவு நாட்டுக்கு நல்லது வியாசரே?



அண்மைக் காலமாக வைத்திய சாலைகளின் அசமந்தத்தால் பல உயிர்கள் பறிபோகின்றனவே வியாசரே?

**இளங்கோ — மானிப்பாய்**

**நல்ல சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியர் தரம் தாழ்வதற்கு காரணம் என்ன வியாசரே?**

ஆசிரியர் இருந்து கற்பிக்க மாணவர்கள் நின்று கல்விகற்ற காலம்மாறி மாணவர்கள் இருந்து கல்வி கற்க ஆசிரியர் நின்று கல்வி கற்பிக்கும் காலம் எப்போது பிறந்ததோ அப்போதே ஆசிரியம் அதன் அந்தஸ்தை இழந்து விட்டது.

இப்போதைய ஆசிரிய நிலை எப்படி என்றால், பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவன் போதை வஸ்து வைத்திருப்பதை அவதானித்த ஆசிரியர் அவனை அழைத்து உனக்கு இதை யார் தந்தார்கள் என்று கேட்டுவிட்டார்.

அப்போது நேரம் மதியம் 12.30 அன்றைய தினம் பாடசாலையை விட்டு பாடசாலையில் இருந்து அந்த ஆசிரியர் நூறு மீற்றர் தூரம் செல்லவில்லை. அவரை இனந்தெரியாதவர்கள் கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பியோடினார்கள்.

குறித்த ஆசிரியர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது ஆசிரியம் என்பது கத்தியில் நடப்பதைப் போன்றது. இதற்கு இந்த ஒரு நிகழ்வே நல்ல உதாரணம்.

**டிலுக்ஷன் — சண்டிலிப்பாய்**

**யார் ஆட்சிக்கு வந்தால் ஓரளவு நாட்டுக்கு நல்லது வியாசரே?**

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த இன அழிப்பிற்கும் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கும் சரியான முறையில் விசாரணைகளைச் செய்து தவறு செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தக் கூடியவர்.

ஊழல் நிறைந்த நாட்டை முற்றுமுழுதாய் ஊழலை அகற்றி ஊழல் அற்ற சேவையை வழங்கக் கூடியவர்.

இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது என்ற கோட்பாட்டுடன் சிறுபான்மை இனத்தவருக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களை, உரிமைகளை வழங்கக் கூடியவர்.

அதிகரித்துள்ள பொருட்களின் விலையினை குறைத்து மக்கள் சுமையைக் குறைக்கக் கூடியவர்.

போதை வஸ்து மண்டிக்கிடக்கும் இலங்கையைத் துடைத்து சுத்தமான நாடாக மாற்றக் கூடிய ஒருவர்.

அதிகாரங்களை ஜனாதிபதி என்ற ஒருவருக்குள் திணித்து அவர் வைப்பது தான் சட்டம் என்ற நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கக் கூடிய ஒருத்தர்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் மேற்கூறியவற்றை செய்யக் கூடியவர்கள் யாரும் இருந்தால் அவருக்கு புள்ளடி இடலாம்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**நக்கீரன் — மானிப்பாய்**

**யாழ்ப்பாண அலுவலர்களின் நிர்வாகம் தெரியாதவர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட அது நாசமாக்கப்படுகிறதே?**

என்ன செய்வது, முன்பெல்லாம் கல்வி அறிவு என்பதற்கு அப்பால் அனுபவம் முன்னிலையில் இருந்தது.

அனுபவம் உள்ள ஒருவர் குறித்த ஒரு பதவியில் இருப்பதற்கும் அறவே அனுபவம் இல்லாதவர் பதவியில் இருப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

நடைமுறைக்கு சாத்தியமானவற்றை சிந்திக்காமல் படித்ததை அலுவலகத்தில் கொட்டினால் அது ஒரு நாளும் பலனைத் தராது.

அலுவலகங்களில் தொலைபேசிக் கலாசாரம் தலைதூக்கி நிற்கிறது.

அதைச் சரி செய்தாலே பாதிப்பிரச்சினை தீர்ந்துவிடும்.

இதற்குக் கல்வி அறிவா?அனுபவமா? உதவும் என்பதை முடிவெடுக்க வேண்டியவர்கள் முடிவெடுத்தால் சரி.

**ரேகா — வதிரி**

**கோபத்தைப் பிரிவிட முடியுமா வியாசரே?**

கோபமா என மனைவியிடம் கேட்கும் போது “இல்லை” என்று பதில் வந்தால் மிதமான கோபம் எனவும், “எனக்கு என்ன கோபம்” என பதில் வந்தால் கடுங்கோபம் எனவும் “நான் யார் உங்கள் மீது கோபிக்க” என்று பதில் வந்தால் கொலை வெறிக் கோபம் என்றும் பொருள்படும். மனைவியிடம் யாக்கிருதையாக இருப்பது சகலதுக்கும் நல்லது அவ்வளவு தான்.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**அன்பின் வியாசரே கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையே?**

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் இடம்எங்கும் மக்களின் அடிப்படை தேவைகள் தீர்க்கப்படாமலே இருக்கிறது.

இதற்கு முற்று முழுதான பொறுப்பு அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்களே.

மக்களிடம் ஓட்டுக் கேட்டு வாங்கி அதில் பாராளுமன்றம் சென்றால் மக்கள் பிரச்சினை பற்றி பேசித்தான் ஆக வேண்டும்.

மக்கள் வரிப் பணத்தில் அரச அதிகாரிகள் சம்பளம் பெற்றால் மக்கள் சேவை செய்து தான் ஆக வேண்டும்.

இதைவிட்டு விட்டு தமக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லாதது போல மக்களை உதாசீனம் செய்பவர்களுக்கு நரகம் நிச்சயம் என்பதே மறந்துவிடாமல் இருந்தால் சரி.

**விஜயதரன் — உரும்பிராய்**

**அண்மைக் காலமாக வைத்தியசாலைகளின் அசமந்தத்தால் பல உயிர்கள் பறிபோகின்றனவே வியாசரே?**

வைத்தியர் என்பவர் இறைவனுக்கு ஒப்பானவர். மக்கள் வைத்தியர்களை இறைவனைப் பார்ப்பது போல பார்க்கின்றனர்.

இதை முதலில் வைத்தியர்கள் புரிந்து கொண்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

வெறும் பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு தமது சேவையை குறுக்கினால் அது ஒரு நாளும் அறம் ஆகாது.

இவ்விடத்தில் நேரம், காலம் பாராமல் அர்ப்பணிப்பாய் சேவையாற்றும் வைத்தியர்கள் பலர் எம் முன்னே இருக்கவே செய்கின்றனர்.

ஒருபானை பாலிற்கு ஒருதுளி விடம் போதுமானது.

ஒட்டு மொத்தப் பாலும் விடமாகிவிடும்.

தற்போது வைத்தியத் துறையை அவ்வாறான கண்ணோட்டத்துடனேயே மக்கள் பார்க்கின்றனர்.

**சுதன் — குப்பிளான்**

**அபிவிருத்தி என்று தமிழர்களை ஏமாற்றியது போல சிங்கள மக்களையும் ஏமாற்றுகிறார்களே?**

ஏமாறுபவன் இருக்கும் வரை ஏமாற்றுபவனும் இருக்கவே செய்வான். இவ்விரண்டையும் ஒன்றே ஒன்று பிரித்துவிட முடியாது.

ஆயினும் தெற்குப் பகுதியில் சிங்கள மக்களை ஏமாற்றுவது, என்பது ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் மனிதனைக் கடிக்கத் தொடங்கிய கதைபோலவே.

அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக இல்லாதது- பொல்லாதது எல்லாவற்றையும் கூறி எவ்வளவு ஏமாற்றமுடியுமோ அவ்வளவு ஏமாற்றி அதிகாரத்தை பெற்றுவிட்டால் அடுத்த ஐந்து வருடத்திற்கு என்னை ஆட்டவும் முடியாது அசைக்கவும் முடியாது என்ற உச்ச நம்பிக்கையில்த் தான் அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : உரிமைக்குரல்
இசை: மெல்லிசை மன்னர்
பாடல்: கண்ணதாசன்
பாடியவர்: கே.ஜே.யேசுதாஸ், பி.சுசீலா



விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

மனதில் வடித்து வைத்த சிலைகள்– அதில்
மயக்கம் பிறக்க வைத்த கலைகள்
மேகங்கள் போல் நெஞ்சில் ஓடும்
வானத்தை யார் மூடக்கூடும்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

கோவில் பெண் கொண்டது
தெய்வம் கண் தந்தது
பூஜை யார் செய்வது – இந்தப்
பூவை யார் கொள்வது
ஊமைக்கு வேறேது பாஷை?
உள்ளத்தில் ஏதேதோ ஆசை
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

தீபம் எரிகின்றது ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது கனவு பலிக்கின்றது
எண்ணத்தில் என்னென்ன தோற்றம் – என்
நெஞ்சத்தில் நீ தந்த மாற்றம்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

# ஒலிம்பிக் சுடர் ஏந்திய ஈழத்தமிழர்!

*"அந்த டார்ச் ஏந்தி நான் ஓடியபோது பெரிய பெரிய அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் வணக்கம் வச்சாங்க. என்னுடைய வெள்ளை அங்கிக்குக் கிடைத்த பெருமை. எந்தத் தொழிலும் குறைவானது இல்லை என்ற உணர்வை அது கொடுத்தது"*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி. உலகத் தமிழர்களுக்கு ஒரு பெருமையை கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியின்போதும் ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டு அது உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு. போட்டி நடைபெறும் நகருக்கு வரும். அந்தச் சுடர் வெறும் நெருப்பு மட்டுமல்ல. பண்டைய கிரேக்கத்திலிருந்து நவீன காலம் வரை மனிதகுலத்தின் ஆன்மாவைப் பிரதிபலிக்கும் நீட்சி.

அந்த ஆன்மாவை ரிலே டார்ச் ஆக ஏந்திய தமிழர் எனும் பெருமையைப் பெற்றிருக்கிறார் பிரான்ஸில் வசிக்கும் புலம் பெயர் தமிழரான தர்ஷன் செல்வராஜா.

ஒலிம்பிக் தொடக்க விழா. நிறைவு விழா என எல்லா இடங்களிலும் பெருமைப்படுத்தப்பட்ட இந்தத் ஈழத்தமிழருக்கும் ஒலிம்பிக்கிற்கும் என்ன சம்பந்தம்? அவரிடம் பேசினோம்.

"நான் தர்ஷன் செல்வராஜா. சொந்த ஊர் யாழ்ப்பாணத்திலே இருக்கும் தெல்லிப்பளை. பள்ளிப் படிப்பு முழுவதும் வவுனியாவில் தான் படிச்சன். அந்தச் சமயத்தில அப்பாவின் உடல்நிலை நீரிழிவு நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிச்சு. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியேல. மிகவும் கஷ்டப்பட்டன்.

அப்போது என் தாய் மாமா பிரான்ஸில் இருந்தார். அங்கே சென்று வேலை தேடலாமென்று யோசனையில. உடன பிரான்ஸ் பயணப்பட்டேன்" என்று ஒலிம்பிக் சுடரின் தீப்பொறி பற்றத் தொடங்கிய இடத்தை அழகான ஈழத்தமிழில் விவரித்தார் தர்ஷன் செல்வராஜா.

"முதல் ஆறு மாத காலம் பட்டினிப் போராட்டம்தான். என்ன வேலை செய்வது எண்டே தெரியேல. 2006 ஆம் ஆண்டு ஒரு இத்தாலியன் உணவகத்தில் வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அங்கே சாதாரண கிளீனிங் செய்யும் வேலைக்காகத்தான் போனேன். எண்ட ஓனர் அந்த ரெஸ்டாரண்ட்ட பிரான்ஸ் முனிசிபாலிட்டிக்கு வித்திட்டார். அடுத்து நாங்க என்ன செய்யப் போறோம் எண்டே தெரியாத திக்கற்ற நிலை" என்று முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்த கதையைச் சொன்னார் தர்ஷன் செல்வராஜா.

"ரெஸ்டாரண்ட்டில் நான் பணியாற்றிய சமயத்தில ஒரு பேக்கரி ஓனருக்கும் எனக்கும் சிநேகிதம் ஏற்பட்டிருந்தது. அவர் என்னுடைய நிலையைக் கேள்விப்பட்டு அவரது பேக்கரியில் சேர்த்துக் கொண்டார்.

அதிலும் 8 வருட அனுபவங்கள் பிரான்ஸின் பாரம்பரிய உணவான பாண் ரொட்டி (baguette) தயாரிப்பதில் தர்ஷன் ஸ்பெஷலிஸ்ட் என்று கதைக்கிற அளவுக்குத் திறமையைக் கொடுத்தது" என்னும் தர்ஷன் செல்வராஜா. தான் வேலை செய்த பேக்கரியையே குத்தகைக்கு எடுத்து உரிமையாளராக அடுத்த நிலைக்குச் சென்றிருக்கிறார்.

நீண்ட வடிவில் பிரட் போல இருக்கும் பிரான்ஸ் நாட்டின் பாண் ரொட்டிக்கு (baguette) தனி வரலாறு உண்டு. அது வெறும் உணவாக அல்லாமல் அவர்கள் வாழ்வியலின் உயிராக இருக்கிறது. ஏனெனில் பிரெஞ்சுப் புரட்சியில் கொடுங்கோல் மன்னராட்சியை எதிர்த்த களவீரர்களின் பசியாற்றிய உணவு என்பதே அதன் சிறப்பு.



அதனால் பிரான்ஸ் நாட்டின் தேசிய உணவாக யுனெஸ்கோ அதனை அங்கீகரித்திருக்கிறது. இப்போதும் பிரான்ஸ் தேசத்தின் ஒவ்வொரு மாகாணத்திலும் அதற்கென பிரத்யேகப் போட்டி நடத்தி. அதில் சிறப்பாக இருக்கும்சுமையல்கலைஞர்களுக்குப் பரிசு வழங்குவது வழக்கம்.

அதிலும் தலை நகர் பாரிஸில் நடக்கும் போட்டியில் வெற்றி பெறுகிற வருக்கு. பிரான்ஸ் அதிபருக்கே பாண் ரொட்டியைத் தயாரித்துக் கொடுக்கும் சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும். இப்படியாக 2018 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் முதல்முறைகலந்து கொண்டாலும் மூன்றாம் இடத்தைப் பிடித்திருக்கிறார் தர்ஷன்.

சிறிது இடைவேளைக்குப் பின்னர் முதல் இடம் பிடிக்க வேணும் என்ற இலட்சியத்தோடு 2023 ஆம் ஆண்டு மீண்டும் போட்டியில் கலந்து கொண்டோம். போட்டியில் எங்களுடைய ரொட்டி முதல் பரிசை வென்றது. அது என் வாழ்வின் மறக்க முடியாத தருணம்" என்று பூரிப்போடு சொல்கிறார் தர்ஷன்.

நாங்கள் தினமும் ஜனாதிபதி மாளிகைக்குச் செல்வோம். எங்கள் வாடிக்கையாளர்களும் 'ஜனாதிபதி சாப்பிடும் அதே பாணை நாங்களும் உண்கிறோம் என்று ரொம்ப சந்தோஷப்படுவார்கள். இப்படியாக ஒருநாள் பிரான்ஸ் நாட்டின் விளையாட்டுத் துறை மந்திரி எங்கள் ரொட்டியை உண்ண. ஒலிம்பிக் டார்ச் ஏந்தும் வாய்ப்பு எனக்குக் கிடைச்சது" என்றார் தர்ஷன்.

"அந்த டார்ச் ஏந்தி நான் ஓடியபோது பெரிய பெரிய அதிகாரிகள். இராணுவ அதிகாரிகள் வணக்கம் வச்சாங்க. என்னுடைய வெள்ளை அங்கிக்குக் கிடைச்ச பெருமை. எந்தத் தொழிலும் குறைவானது இல்லை என்ற உணர்வை கொடுத்தது. பெரிய பெரிய பிரபலங்கள் டார்ச்சைக் கொண்டு சென்ற அந்த இடத்தில ஒரு புலம் பெயர் தமிழனா எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்.

யுத்த காலத்தில் என் குடும்பத்தினரோ நானோ பாதிக்கப்படாவிட்டாலும் எப்போதுமே அந்த யுத்தத்தின் வலிகள் எனக்கு உண்டு. அப்படியான தேசத்தில் இருந்து வந்து இப்படியான வெற்றி அடைந்தது. தொடர்ந்து ஓடுவதற்கான உற்சாகத்தைத் தந்திருக்கு" என்பவர். தன் நிறுவனத்தின் பல கிளைகளை மூன்று உலக நாடுகளில் புதிதாகத் திறந்து தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் இரதோற்சவச் சிறப்பு மலர்






**தேரேறி வாருமையா பாராளப் பெருமானே**

நல்லூரா! அலங்காரா!!
எவ்வூறும் இல்லாமல்
எல்லோரும் வாழருளும்
ஓங்காரா சிங்காரா
தேரேறி வாருமையா

நல்லூரா! அலங்காரா!!
பல்லூரில் இருந்தும்மை
உன்னூரில் தேடிவரும்
பக்தர்கள் புடைசூழ
தேரேறி வாருமையா

நல்லூரா! அலங்காரா!!
சொல்லோரின் உழவர்கள்
சொக்கி நின்று செந்தமிழால்
சங்கீதம் பாடிவரத்
தேரேறி வாருமையா

நல்லூரா! அலங்காரா!!
தொண்ணூறு காலத்தில்
வல்லூறுகள் வட்டமிட்ட
வல்லவரும வெற்றிகொள்ள
தேரேறி வாந்தீரையா

நல்லூரா! அலங்காரா!!
வீறமைகரன் வேணவாவை
வரிகளாக வலம்புரியும்
முழுங்கட்டும மால்மருகா
முருகா தேரேறி வாருமையா

மகேசன் கஜேந்திரன்.



**நல்லை முருகா! அபயம் அருள்வாய்!**

ஆடும் மயில்மீது அமரும் முருகா!
பாடும் பணியால் பணிந்தேன் முருகா!
நாடும் அடியார்க்கு அருள் செய்தருள்வாய்
வாடும் அடியார் துயர் தீர்ப்பவனே

நல்லை முருகா அபயம் அருள்வாய்
தொல்லை வினைகள் தொடரா தருள்வாய்
வில்லை ஒத்த இருதேவியருடன்
நல்லை வீதியில் பவனி வருவாய்

அல்லி விழியும் முல்லை நகையும்
சொல்லில் அடங்கா அழகும் உடைய
மெல்லியல் இருவரும் அணைந்தே இருக்க
அல்லல் களைந்தென் வினையைக் களைவாய்

சக்தி தந்த வேலால் பகைவர்
சக்தி களைந்து சரித்திரம் படைத்தாய்
பக்தி செய்து பணியும் அடியார்க்கு
முத்தி தருவாய் நல்லை முருகா

தங்க ரதத்தில் பவனி வந்து நீ
எங்கள் வினைகள் களைவாய் முருகா
பங்கம் இல்லாது பணிந்தேன் நின்கழல்
கந்தா! முருகா! கருணை செய்தருள்

பண்டத்தரிப்பு- எஸ்.சிவானந்தராஜா.

**தேரேறும் திருக்காட்சி காண...**

நல்ல ஊராம் நல்லூரில் கோயில் கொண்ட எம் முருகா
சக்தியின் மைந்தா சங்கரன் புதல்வா சர்வமும் அறிந்தவா
சூரரை வதம் செய்து தேவரைக் காத்தவா
தயங்காது தந்தைக்குபதேசம் செய்தவா
நம்பிக்கையுடன் உனை நாடி வந்தோம் நல்லூர்க் கந்தா
நீ தேரேறும் திருக்காட்சி காணத் திக்கெட்டும் இருந்து வந்தோம்
யாவர்க்கும் அருள் பாலிப்பாய் எம் அருட்குமரா

மாவையூர் நேசன்.

**தேரேறும் ஆறுமுகக் கந்தனின் அழகு முகம்**

ஆறுமுகத்து அழகுதனில் அருளும் வீச
ஆர்பரித்து பக்தர் கூட்டம் அலையாய் எழும்
நீறு பூத்த பெருப்பாகி இருந்த துயர்
நெஞ்சமதில் நின்நினைவால் அகன்றழியும்
வேறுயார் காத்திடுவார் வேல் முருகனே
வேண்டும் வரம் தந்தெமக்கு வினை தீர்ப்பவனே
மாறுபாடு காணமல் எல்லோர்க்கும் மருளும்
மனம் கொண்ட வள்ளலே சரணம் சரணம்

யாழ்ப்பாணம்- விஜயகண்ணன்

**நல்லூரில் தேரினில் வருவாம்**

உலகெல்லாம் ஒரு நிகர் ஆகிடவேண்டி
உன்னடி தொழுதிட வைகறை எழுந்தார்
கலங்கிய காரிருள் கலைந்தது சோலைக்
கவின் சிறைப் பறவைகள் கலகலப்பாடும்
துலங்கிய மங்கையர் பிள்ளைகள் தொண்டர்
தொடுத்ததும் மலரோடு வலம் வரப்போந்தார்
இலங்கிய நல்லூர் எழிலாளனே
தேரினில் வருவாய்.

கலாபூஷணம்
செ.பரமநாதன்
மண்டைதீவு

**திருத்தேரேறி வருவாம் ஐயனே!**

தமிழ்த் தெய்வமாய் எழுந்தவனே!
தாமரை மலர்கள் மீது அமர்ந்தவனே!
திருத்தேரேறி வலம் வரும் நல்லூரானே!
தீராப் பிணி தீர்க்க வரும் வேலவனே!
துய்ய மலர்ப்பாதம் தொழுதெழுதேனே!
தூய நின் பாதம் பணிந்தெழுதேனே!
தெவிட்டாத இன்பப் பொருளோனே!
தேடி வந்தோர் குறை தீர்ப்பவனே!
தைப்பூச நாளின் அதிபதியானவனே!
தொல்லை பல களைபவனே!
தோகை மயில் மீது ஆடி வரும் ஐயனே வாராய்!

அரியாலையூர்- மிஷாந்தி ஜெயசிங்கம்.





வேலவன் வடிவேவா! நாடிவா எங்களை நாடிவா!
சிவ ஆனந்தி கபே
பத்திரிகை முகவர்

சிற்றுண்டிவகைகள், குளிர்பானங்கள்
மற்றும் சகல பத்திரிகைகளையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
நல்லைக் குமரன் தேர் உற்சவத்தில்
நாமும் பங்கு கொண்டு அவன்
திருவருளைப் பெறுவோமாக
(C-1087)
சிவ ஆனந்தி கபே
இல.521, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல: 076 404 0326


## நல்லைக் கந்தவேளே!

நினைப்பதுவும் ஒன்றாகும் நிகழ்வதுவே றொன்றாகும்
நிம்மதியும் என்னாகுமோ
முனைவதுவும் ஒன்றாகும் முடிவதுவே றொன்றாகும்
முருகனே யுனதுலீலை
மனதினிலே தோன்றுவது, கூடுவதும் மோடுவதும்
மனிதவியல் பானநிகழ்வே
தினந்தோறு மடியார்கள் திறனாய்ந்து பலனீயும்
திருநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறிவரும் எங்கள் நல்லைக் கந்தா
ஓடோடி வந்து எம் வினைதீர்த்து வையடா!



தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற

KJ

# கல்யாணி
## நகை மாளிகை





(C-1090)

அதிநவீன வடிவமைப்புகளை உங்கள் விருப்பத்திற்கேற்ற டிசைன் களில் குறித்த தவணையில் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கல்யாண் தங்க அடைவு**
இல.121, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 430 5005/074 021 4111
0777 840 379

**NTN** தங்க அடைவு கடை சேவை
இல.174A, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
074 051 4131 / 0777 840 379

இல.133B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
074 000 4434 / 077 784 0379

அழகன் முருகனின் ஆசி அனைவருக்கும் கிடைக்கட்டும்



# MODERN ELECTRICALS(PVT) LTD

ME MODERN ELECTRICALS (PVT) LTD

உங்கள் இல்லங்கள் வண்ணமயமாய்
மின்னிட உலகத் தரம் வாய்ந்த

- Light
- Electrical
- Industrial

என்பவற்றுக்கு எம்மை நாடுங்கள்






INFINITY ELECTRICAL SOLUTIONS

(C-1089)

இல: 88, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
077 542 1769, 077 820 9424, 021 223 2558
Email: MODERNELECTRICALS.ME@GMAIL.COM

# SMART TECH SOLUTION

STS

உங்கள் பாதுகாப்பில் நாங்கள் அக்கறை கொள்கின்றோம்.

since 2009

## Our Services

- CCTV Sales & Installation
- Alarm System
- Door Lock
- Fingerprint Attendance
- Electric Fence
- Local Networking
- Computer Repair & Maintenance
- Software Development




உங்கள் சொத்துக்களை எமது சேவையின் உதவியுடன் பாதுகாத்திடுவீர். CCTV Installation துறையில் தரம்மிக்க, அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களுடன் கூடிய சேவை



கண்காணிப்பு கமரா துறையில் 15 வருட அனுபவம்

எமது வாடிக்கையாளர்களை தொடர்பு கொண்டு எமது சேவைத்தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

விற்பனைக்கு பிந்திய சேவை 100% வாடிக்கையாளர்களின் அழைப்புக்கு பதிலளிக்கப்படும்.

இல.282, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
www.smarttechsolution.lk

071 684 3023
021 221 3023

(C-1086)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SN

கருணைக்கடலே கந்தா! கதிர்வேலா! உன் அழகே பெரும் அழகு





43 வருட நம்பிக்கை மிகுந்த உங்கள்
கைராசி நிறுவனம்

# சிறி நதியா
## நகை மாளிகை

மின்சார இயந்திரத்தின் மூலம் துல்லியமாக
நகை மதிப்பீடு செய்து தரப்படும்

இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2709, 077 236 7416

தேரேறிவரும் கந்தா உன் கருணை நிதம் எமக்கு வேண்டுமையா

அழகிற்கு அழகு சேர்க்கும்
தங்க நகைகளின் சாம்ராஜ்ஜியம்



# NSR ஜுவல்லறி

ஓடர்கள் அனைத்தும் குறித்த தவணையில் வாடிக்கையாளர்களிடம்
வழங்கப்படும் என்பதனை பெருமதிப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்



மின்சார இயந்திரத்தின் மூலம்
தங்க நகை
மதிப்பீடு செய்து தரப்படும்.

இல.131, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2809, 077 641 7679

SJ



அழகென்ற சொல்லிற்கு முருகா!



தரம், நம்பிக்கை, அழகு, புதிய டிசைன்கள்
உங்கள் எண்ணத்தின் வண்ணமாய் மின்னும்
தங்க நகைகளின் தரம்மிக்க ஸ்தாபனம்

# சத்தியா ஜுவல்லறி

உங்கள் வீட்டில் நடைபெறும் விசேஷங்கள் எதுவாயினும்
கைராசி ஸ்தாபனமான எம்மை நாடுங்கள்

இல.136, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 221 1332, 076 9195 186

(C-1091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்ரேலின் அவசர நிலை மூளும் மற்றொரு போர்

**ஹிஸ்புல்லா அமைப்பு அடுத்தடுத்து இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தலாம் என்பதால், நாடு முழுவதும் 48 மணி நேரத்துக்கு அவசரநிலையை அறிவித்திருக்கிறது இஸ்ரேல். தனது நாட்டு மக்களை வெளியே வர வேண்டாம் எனவும் எச்சரித்திருக்கிறது.**

ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரமடைந்திருக்கும் நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் போரும் அண்டை நாடுகளுக்குப் பரவி, பதற்றத்தை அதிகப்படுத்தியிருக்கிறது!

பாலஸ்தீனத்திலுள்ள காசா பகுதியில் சுமார் 10 மாதங்களாகக் கடும் தாக்குதல்களை நடத்திவருகிறது இஸ்ரேல் இராணுவம். காசாவிலுள்ள போராளிக்குழுவான ஹமாஸும் பதிலடித் தாக்குதல்களை நடத்திவருகிறது. ஹமாஸ் படைக்கு ஆதரவாக ஏமனில் இயங்கும் ஹவுதி அமைப்பும், லெபனானில் செயற்பட்டுவரும் ஹிஸ்புல்லா அமைப்பும் அவ்வப்போது இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்திவந்தன. இந்த நிலையில், கடந்த மாதம் ஹிஸ்புல்லா அமைப்பின் படைத்தளபதி ஃபுவாத்ஷுக்ர்-ஐ, வான்வழித் தாக்குதல் மூலம் லெபனானில் வைத்துக் கொலை செய்தது இஸ்ரேல். இதனால் உச்சகட்ட கோபத்திலிருந்த ஹிஸ்புல்லா தற்போது இஸ்ரேல்மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருக்கிறது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக ஹிஸ்புல்லா வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "எங்களது உயர்மட்டத் தலைவர் ஃபுவாத்ஷுக்ர்-ஐ இஸ்ரேல் கொன்றதற்கு பதிலடி கொடுக்கவே ஏவுகணைகள், ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினோம். காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்ததால், தாமதமாக பதிலடி கொடுத்திருக்கிறோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், தங்களது படைதான் முதலில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்திருக்கிறது. "இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள், ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்த ஹிஸ்புல்லா தயாராக இருந்தது எங்களுக்குத் தெரியவந்தது. எனவே, இந்த அச்சுறுத்தலைக் களைவதற்கான தற்காப்பு நடவடிக்கையாக லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா அமைப்பின்மீது தாக்குதல் நடத்தியிருக்கிறோம்" என்று தெரிவித்திருக்கிறது. இதை முற்றிலும் மறுக்கும் ஹிஸ்புல்லா, பொய்யான தகவல்களை இஸ்ரேல் பரப்பிவருகிறது' என்று தெரிவித்திருக்கிறது. இந்தத் தாக்குதல்களில் பெரும் உயிரிழப்புகள் இல்லையென்றாலும் இரு தரப்புக்கும் சிறிய சேதங்கள் உண்டாகியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஹிஸ்புல்லா அமைப்பு அடுத்தடுத்து இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தலாம் என்பதால், நாடு முழுவதும் 48 மணி நேரத்துக்கு அவசரநிலையை அறிவித்திருக்கிறது இஸ்ரேல். தனது நாட்டு மக்களை வெளியே வர வேண்டாம் எனவும் எச்சரித்திருக்கிறது. அதேநேரம், லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் இருக்கும் பகுதிகளிலுள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் சிலர் ஈரான் ஆதரவோடு லெபனானில் செயற்பட்டுவரும் அமைப்புதான் ஹிஸ்புல்லா. ஏற்கெனவே, ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை தங்கள் மண்ணில் வைத்து இஸ்ரேல் படுகொலை செய்ததால் ஈரான் கடுங்கோபத்திலிருக்கிறது. தற்போது இஸ்ரேல்மீது ஹிஸ்புல்லா தாக்குதலைத் தொடங்கியிருக்கும் நிலையில் ஈரான் இராணுவம் இதில் கைகோர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அப்படி நடந்தால் அது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை உண்டாக்கும். உலகம் முழுவதுமே இந்த மோதல் தாக்கத்தை உண்டாக்கும் என எச்சரிக்கின்றனர்.

ஹிஸ்புல்லா, இஸ்ரேல் என இரண்டு தரப்புமே போரை விரும்பவில்லை. ஆனால் "சீண்டிப் பார்த்தால் முழு அளவிலான போருக்குத் தயாராக இருக்கிறோம்" எனச் சொல்லியிருக்கின்றன. மோதிக்கொள்ளும் இரு தரப்பும் ஒரு பெரும் போருக்கு முன்பாக வழக்கமாகச் சொல்லும் வார்த்தைகள்தான் இவை.

**இன்னொரு போரை இந்த உலகம் தாங்காது!**

# இறைவன் நினைத்தால்

இரவு இரண்டு மணி. அந்த மனிதர் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார். தூக்கம் வரவில்லை. எழுந்து பால்கனியில் போய் நின்றார். தெருவில் அரவமே இல்லை. வானத்தில் அரைவட்ட நிலா மட்டும் விழித்துக்கொண்டிருந்தது. இன்றைக்கு எனக்கு என்ன ஆச்சு. ஏன் தூக்கம் வராம இப்பிடி மனசு அலைபாயுது?

அவர் மனைவியும் மகனும் மகளும் அவரவர் அறைகளில் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து காரை எடுத்தார். வோட்ச்மன் அவரை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு, அவசர அவசரமாக கதவைத் திறந்துவிட்டார்.

மனம்போன போக்கில் காரை ஓட்டினார் அந்த மனிதர். பிறகு ஒரு தெருவுக்குள் காரைவிட்டார். அங்கே ஒரு சிறு கோயில். கதவு பூட்டப்பட்டிருந்தது. வெளியே ஒரு டியூப் லைட் மட்டும் எரிந்துகொண்டிருந்தது. "சாமி கும்பிட்டா ஒருவேளை அமைதி கிடைக்குமோ!' ஓர் ஓரமாகக் காரை நிறுத்தி, இறங்கினார். கோயில் வாசலுக்கருகே போனபோது அங்கே ஒரு இளைஞன் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். அவன் கோயிலைப் பார்த்து உட்கார்ந்திருந்தான். கண்கள் மூடியிருந்தன. இந்த நேரத்தில ஏன் இவன் உட்கார்ந்திருக்கான்?'

அவர், அவன் தோளைத் தொட்டார். "என்னப்பா இந்த நேரத்தில சாமி கும்பிட்டுக்கொண்டிருக்கிறாய்?

ஒரு கணம் பதில் சொல்லாமல் அவன், அவரை ஏற இறங்கப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின. எனக்கு ஒரே மகன் சார். மூளையில் சின்னக் கட்டி. இரண்டு நாளில் ஒப்ரேசன் பண்ணணும் என்று டொக்டர் சொல்கிறார். ஏழு லட்சம் ரூபாய் ஆகும். என்கிட்ட அவ்வளவு பணம் இல்லை. அதான்..." அவன் உதடுகள் நடுங்கச் சொன்னான்.

அந்த மனிதர் தன் காருக்குப் போனார். அதிலிருந்து ஒரு பையை எடுத்துக்கொண்டு வந்தார். அவனிடம் கொடுத்தார். "இதுல ஏழு லட்சம் ரூபாய்க்கு மேலயே பணம் இருக்கிறது. வெச்சுக்கோ. வேற ஏதாவது தேவைப்பட்டாலும் இந்த அட்ரஸுக்கு வா" என்றபடி ஒரு விசிட்டிங் கார்ட்டை நீட்டினார். இந்த அட்ரஸ் வேணாம் சார். என்கிட்ட வேற ஒரு அட்ரஸ் இருக்கு. "வேற அட்ரஸா... அது எந்த அட்ரஸ்?"

"எனக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக இரவு இரண்டரை மணிக்கு உங்களை இங்கே அனுப்பி வைத்தார் பாருங்க... அவரோட அட்ரஸ்" என்றவன், கோயிலைக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



26 செங்கை ஆழியான்

(இந்த நீர் வழியூடாகத் தான் இரண்டாம் ஈழ யுத்தம் ஆரம்பமானபோது கோட்டைக் குள்ளிருந்த ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறித் தப்பியது.) நில வழி தொங்கு பாலத்தினால் இணைக்கப்பட்ட பிரதான வாயிற்புறமாகும். ஒல்லாந்தர் அப்பாலத்தை உள் மதிலோடு தூக்கிப் பாதையைத் துண்டிக்கவும் தேவையான போது பாலத்தை இறக்கி இணைக்கவும் வசதிகளைக் கொண்டிருந்தனர்.


வாயில் சுவரின் மேல் மணிக்கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக்கப்பட்டிருந்த காண்டாமணி. தேவாலய வழிபாட்டு நேரத்தையும், கால நேரத்தையும் ஒலியெழுப்பியறிவித்து வந்தது.

கோட்டைக்குள்ளிருந்த "சதுரங்க" வடிவத் தேவலாயம் குரூஸ் கேர்க் (Kruys Kerk) எனப் பட்டது. சமவளவான பக்கங்களைக் கொண்ட கிரேக்கச் சிலுவை (Greek Cross) வடிவினது. இக் கிரேக்கச் சிலுவை வடிவை "குரீஸ் கேர்க்" என்பர். கோட்டையின் தென்-கிழக்குப் பகுதியில் இந்தத் தேவாலயம் அமைந்திருந்தது. இதன் பிரதான வாயில் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்தது. வடக்கு வாயில் ஊடாகவும், தெற்கு வாயில் ஊடாகவும் ஆலயத்தினுள் பிரவேசிக்க முடியும். தேவலயத்தினுள்ளே 1660 ஆம் ஆண்டுக்குரிய கல்லறைக் கற்களைக் காணலாம். ஆனால், பிரதான வாயிலில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 1706 ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவாலயம் அடெம் வன் டேர்டுயின் என்ற கமாந்தர் காலத்தில், மார் டின் என்ற கட்டிடக் கலைஞரால் கட்டி முடிக்கப்பட்டது. இத்தேவாலயம் இரு பாலையில் இதற்கென அரிவிக்கப்பட்ட செங்கற்களையும் பயன்படுத்தியது. இச் செங்கற்களுக்கு ஆயிரத்துக்கு மூன்றரைப் பணம் கொடுக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவாலயத்தில் இரு பாரிய மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை போர்த்துக்கேயர் காலத்தவை என்பது அவற்றில் "N. S. Dos Milagres De Jaffnapatao 1648' என்ற எழுத்துக்கள் சான்று பகருகின்றன.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட அற்புதமான யாழ்ப்பாணக் கோட்டை வாயிலில், ஒல்லாந்தர் கம்பனியைக் குறிக்கும் "VOC" என்ற எழுத்தோடு கூடிய யாழ்ப்பாணக் கம்மந்தோரின் ஆள் புலத்திற்குரிய கேடயச் சின்னம் (Shield) பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கேடயச் சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பகத் தருவான பனை மரம் வரையப்பட்டிருந்தது. (தொடரும்...)

---




காலத்தின் பதிவு 123

## கடல் புறா

### குடிப் பழக்கம்

"அக்ரமந்திரம்.. அக்ரமந்திரம்.. அக்ர... மந்திரம்," என்று இறைந்து கூவிய இளையபல்லவன் அவளை மஞ்சத்தின் முனையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டுத் தள்ளாடி எழுந்து வாயிற்படியை நோக்கிச் சென்று, "டேய்? யாரங்கே!" என்று காவளாளியை அழைத்தான். வந்த காவளாளியிடம், "போ... போ! கண்டியத்தேவனைக் கூப்பிடு..." என்று உத்தரவிட்டு அறைக்குள் தள்ளாடி வந்து, "மஞ்சளழகி... மனைவி. எடு அந்த மதுவை..." என்று அறை மூலையிலிருந்த ஒரு குப்பியைக் காட்டினான். அவள் கொடுக்காது போகவே நீளவாயுடனிருந்த அந்த அரபு நாட்டுக் குப்பியை அவனே எடுத்து வாயில் வைத்து மதுவைச் சிறிது குடித்துக்கொண்டே மீண்டும் மஞ்சத்தில் வந்து உட்கார்ந்து மஞ்சளழகியையும் பக்கத்தில் உட்காரச் செய்தான். "மனைவி மது அறிவை இயக்கும்.. இயக்கும்" என்று உளறி, குப்பியை இன்னொரு கையால் தட்டிக் காட்டினான். மீண்டும் போதையில் உளற ஆரம்பித்து, "மனைவி, மரக்கலங்கள் பலவிதம். ஒன்று ஸர்ப்ப மந்திரம். இன்னொன்று மத்திய மந்திரம். இன்னொன்று அக்ர மந்திரம், பிறகு தீர்க்கம், உன்னாகம். தவிர, தாரணி.. லோலா, காமினி, தாரி, பேகினி, ஜங்கலா, ஊர்த்வா, அனுர்த்வா, ஸ்வர்ணமுகி, மந்தரா உம் தெரிகிறதா?.. நீ சொல் சொல்" என்று மதுக்குப்பியில் விரலால் அடித்தடித்துச் சொன்னான்.

மஞ்சளழகி பதிலேதும் சொல்லவில்லை. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். சொல்ல மாட்டாய். உம்..ஏன்? தெரியும் தெரியும். நான் படித்திருக்கிறேன். நீ படிக்கவில்லை. போஜன் எழுதியிருக்கிறான். நூலின் பெயர் யுக்தி கல்பதரு. மரக்கல சாத்திரம் முழுமையும் அதில் உண்டு. உண்டு. மணம் செய்துகொள். சொல்லித் தருகிறேன். உம்" என்று மீண்டும் உளறிவிட்டுப் பஞ்சணையில் திடீரென விழுந்தான். மஞ்சளழகி நீண்ட நேரம் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அவன் பஞ்சணையில் மயங்கிக் கிடந்தான். அவள் குனிந்து தன் செவ்விய இதழ்களை அவன் நெற்றியில் புதைத்தாள். துக்கம் பீறிட்டதால் அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொல பொலவென சுடச்சுட அவன் முகத்தில் உதிர்ந்தன. அந்த நீர்த்துளிகளின் உஷ்ணங்கூட அவனை எழுப்பவில்லை. மஞ்சளழகி மன வேதனையுடன் அந்த அறையை விட்டு அகன்றாள். குடிப்பழக்கம் இளையபல்லவனை அழித்து விட்டதென்றே தீர்மானித்தாள்.

அதில் ஏதாவது சந்தேகமிருந்தால் அதை அடுத்த நாள் கண்டியத்தேவன் தீர்த்துவிட்டான். மறு நாள் கடற் கரையில் உலாவிய மஞ்சளழகி, இளையபல்லவன் மரக்கலம் பழுது பார்க்கப்படும் இடத்திற்குச் சென்றவள் அங்கு நடந்து கொண்டிருந்த வேலையைப் பார்த்து திகைப்பிரமை பிடித்து நின்றாள். தன் பிரமையைவிடப் பெரும் பிரமை கண்டியத்தேவன் முகத்தில் இருந்ததையும் கவனித்தாள் மஞ்சளழகி. இளைய பல்லவனைத் தன் தந்தை தொலைத்து விட்டார் என்ற முடிவுக்கு வந்தாள்.

**தளமிழந்த கப்பல் மதியிழந்த தளபதி!**

பழுது பார்ப்பதற்காகப் பெரும் கயிறுகளைக் கொண்டு கரையோரம் இழுக்கப்பட்டுக் கரையில் பாதியும் அலை மோதும் நீரில் பாதியுமாகப் பெரும் திமிங்கலம் போல் கிடந்த இளையபல்லவனின் போர்க்கலத்தில் நடந்து கொண்டிருந்த வேலையைக் கண்ட மஞ்சளழகி, இந்த விபரீதம் எதற்காக நடக்கிறது? என்று எண்ணித் திக்பிரமை பிடித்தபடி சில விநாடிகள் அந்த மரக்கலத்தின் மீது வைத்த கண்ணை வாங்கமாலே நின்றாள்.

கோட்டை வாயிலைக் கடந்து வரும்போதே அவளைக் கண்டு விட்ட கண்டியத்தேவனும் அவள் மரக்கலத்தின் அருகே வந்ததும் எதிர்கொண்டு வாருங்கள், என்ற ஒற்றைச் சொல்லால் அவளை வரவேற்கவும் செய்தான். அந்த ஒற்றைச் சொல்லை அவன் உபயோகித்தபோது அவன் குரலிலிருந்த வெறுப்பையும், துயரத்தையும் கவனித்த மஞ்சளழகி அந்த வெறுப்புக்கும் துயரத்துக்கும் எத்தனை சிறந்த காரணமிருக்கிறது என்பதை மரக்கலத்தை நோக்கிய மாத்திரத்தில் புரிந்து கொண்டாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

414

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பொய்கள் பல்கிப்பெருகி...


கவிதைக்குப் பொய் அழகு என்று சொல்வார்கள். நன்மைபயக்குமெனில் ஆபத்தில்லாத பொய் நியாயமானது என்றும் சொல்வார்கள். ஆனால் மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை. சிகிச்சைக்காகச் செல்லும் பல பொதுமக்கள் மருத்துவத்துறையினருக்குப் பல பிழையான பொய்யான தகவல்களை வழங்கிவருவது மிகவும் வேதனையானதும் ஆபத்தானதுமான விடயமாக இருந்து வருகின்றது.

கொடுக்கப்படும் மருந்துகளைச் சரிவரப் பாவிக்காத பொழுதும் பாவித்துவருவதாகச் சொல்லும் பொய்கள், பழைய மருத்துவத் தகவல்களை மறைத்துச் சொல்லும் பொய்கள், நல்ல மருந்து கிடைக்கும் என்று நம்பி அறிகுறிகளைக்கூட்டிச் சொல்லும் பொய்கள், பல மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளைத் தகுந்த ஆலோசனையின்றிக் கலந்து பாவித்துக்கொண்டு உண்மை நிலையை மறைக்கச் சொல்லும் பொய்கள் எனப் பொய்களின் வகைகள் பல்கிப்பெருகி மருத்துவத்துறை எங்கும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் மருத்துவரைச் சந்திக்கும் பொழுதுதான் பாவித்துக்கொண்டிருக்கும் மருந்துகளின் சரியான உண்மையான விபரங்களை மருத்துவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மருந்தும் எவ்வாறு வேலைசெய்கிறது என்பதைக் கணிப்பிட்டே தொடர்ந்து வழங்கப்படவேண்டிய மருந்துகளும் சிகிச்சை முறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே மருந்துகளைக் கூட்டிக் குறைத்து அல்லது மாற்றிப் பாவித்து விட்டு ஒழுங்காக மருந்து எடுப்பதாகச் சொல்லும் பொய் உண்மையிலேயே மிகவும் ஆபத்தானது.

முன்னைய மருத்துவத் தகவல்கள், முன்பு இருந்த நோய்கள் என்பன ஒருவரின் தற்போதைய சிகிச்சை முறைகளைத் தீர்மானிப்பதற்கு முக்கியமானவை. இதைத் தெரிந்திருந்தும் பலர் பழைய மருத்துவத் தகவல்களை மறைக்க முயல்வதன் காரணம் என்ன?

உண்மையை வரவழைக்க வைத்தியர்கள் சட்டத்தரணிகள் போலவும், துப்புத்துலக்கும் அதிகாரிகள் போலவும் வாதாடித்தான் வைத்தியம் செய்ய வேண்டும் என்ற துர்ப்பாக்கிய நிலையே இங்கு நிலவுகின்றது. துப்புக்கள் துலங்காத பொழுது சில சமயம் துயரமான சம்பவங்கள் நோயாளர்களுக்கு நிகழ்ந்து விடுகின்றன.



தம் உயிரைப் பணயம் வைத்து ஒரு நோயாளி பொய் சொல்லத் துணிவதன் காரணம் என்ன? அவர்களைப் பொய் பேச வைப்பவர்கள் யார்? இதற்குப் பதில் மிகவும் தெளிவானது துல்லியமானது. மருத்துவர்களும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுமே நோயாளர்களைப் பொய் சொல்லவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளிவிடுகிறார்கள்.

இதற்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். உண்மையைச் சொன்னால் வைத்தியர் கோபித்துக் கொள்வார் அல்லது பேசுவார் என்ற பயம் காரணமாகப் பலர் பொய் சொல்லுகிறார்கள். உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு வைத்தியரின் பேச்சுக் கடுமையானது தானா?

தாம் சொல்லும் பொய் எவ்வளவு ஆபத்தானது என்று தெரியாமல் பலர் பொய் சொல்கிறார்கள். அதாவது நோய் பற்றிய போதுமான அளவு அறிவு இன்மையால் சொல்லப்படும் பொய் நோயாளர்களுக்கு இது சம்பந்தமான அறிவைப் புகட்ட வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையே. எனவே இதற்கான பொறுப்பையும் மருத்துவக் குழுவே ஏற்கவேண்டி இருக்கிறது.

உண்மை நிலையை மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை வைத்தியசாலைகளில் இல்லை. சொல்லப்படும் உண்மை பலருக்குத் தெரிந்துவிடும் என்ற மனப்பயம். இதன் இரகசியத்தன்மை பேணப்படுமா என்ற ஏக்கம். இதன் காரணமாக உண்மையை மறைக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பதற்றம் அல்லது பயம் காரணமாக ஏற்படும் தடுமாற்றத்தினாலும் பலர் பொய் சொல்கிறார்கள். நோயாளர்களைப் பதற்றப்படுத்தும் குற்றமும் மருத்துவக் குழு மீதே விழுகிறது.

மருத்துவர்களோ, தாதியர்களோ அல்லது வைத்தியசாலை உத்தியோகத்தர்களோ நோயாளர்களுடன் கோபித்துக்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் அது தவறானது என்பதில் சந்தேகம் இல்லை. எனவே நோயாளர்கள் பயமின்றி, பதற்றமின்றி உண்மையான மருத்துவத் தகவல்களை சொல்ல முன்வர வேண்டும்.

நோயாளர்களில் ஒருவர் தனிமையில் வைத்தியருடன் கதைக்க விரும்பினால் அதற்கான சந்தர்ப்பத்தைக் கேட்டுப்பெற்றுக் கொண்டு உண்மையான தகவல்களை மருத்துவருடன் பகிர்ந்து கொள்ளலாம். இதன் இரகசியத் தன்மை பேணப்படும்.

சில உண்மைகளைப் பேசுவதால் நோயாளர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படலாம். ஆனால் அரிச்சந்திரன் உண்மையை மட்டும் பேசியதால் ஏற்பட்ட சங்கடங்கள் போன்று பாரதூரமாக இருக்காது. எனவே உண்மையை மறைத்து உயிரைப் பணயம் வைப்பது சரியானதா எனச் சிந்திக்க வேண்டும். தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது. எம்மையும் சற்று மாற்றிக்கொள்ள முயல்வோம். மருத்துவத்துறையிலே சொல்லப்படும் பொய்கள் மிக ஆபத்தானவை.

பொய்யாமொழிப்புலவரின் வழிநின்று பொய் பேசுவதைத் தவிர்ப்போம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் நிலச்சரிவு!

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேர் உயிரிழந்துள்ளனர்.**



பாகிஸ்தானின் பெய்து வரும் கன மழையால் திடீர் வெள்ளம் மற்றும் பல மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள கைபர் பக்துன்வா மாகாணத்தின் அப்பர் டிர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.இதில் ஒரு வீட்டின் மேல் கூரை சரிந்து வீழ்ந்ததில் 3 பெண்கள், 6 குழந்தைகள், 3 ஆண்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.விசாரணையில், இந்த விபத்தில் உயிரிழந்த 12 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## உக்ரைனின் தாக்குதலில் 6 பேர் உயிரிழப்பு


(மொஸ்கோ)

ரஷ்ய எல்லைக்கு அருகில் உள்ள நகரத்தில் உள்ள 12 அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 59 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், உக்ரைனின் வடகிழக்கு பகுதியில் உள்ள கார்கிவ் நகரில் உள்ள விளையாட்டு மைதானத்தில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 14 வயது சிறுமி உயிரிழந்துள்ளதுடன் மேலும் 9 குழந்தைகள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் 400 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் தங்கள் நாட்டை நோக்கி ஏவப்பட்டதாக உக்ரைன் அறிவித்துள்ளது. (நி)

## பிரேசிலில் X தளம் முடக்கம்



(பிரேசில்)


பிரபல சமூகவலைத் தளங்களில் ஒன்றான எலோன் மஸ்க்கின் எக்ஸ் தளத்திற்குப் பிரேசில் தடை விதித்துள்ளது.

அண்மையில் பிரேசிலில் எக்ஸ் தளம் மீது விதிக்கப்பட்ட புதிய தணிக்கை உத்தரவுகளால், அங்குள்ள எக்ஸ் அலுவலகம் மூடப்பட்ட நிலையில், ஊழியர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.இது தொடர்பான வழக்கை, பிரேசில் உயர் நீதிமன்றம் விசாரணை செய்த நிலையில், அங்கு ஒரு சட்ட விவகார பிரதிநிதியை 24 மணிநேரத்திற்குள் நியமிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் உயர் நீதிமன்றம் விதித்திருந்த குறித்த காலப்பகுதியில், எக்ஸ் தளத்திற்கான சட்ட விவகார பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், பிரேசில் எக்ஸ் தளத்திற்குத் தடை விதிக்கப்பட்டதுடன், முடக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## கேரளாவைச் சேர்ந்தவருக்கு சவுதியில் மரணதண்டனை



(ரியாத்)

சவுதி அரேபியரை கொலை செய்த வழக்கில் கேரளாவை சேர்ந்தவருக்கு சவுதியில் மரணத்தண்டனை விதிகப்பட்டது.

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் செரும்பா என்ற பகுதியை சேர்ந்தவர் அப்துல்காதர் அப்துல்ரகுமான் 63. இவர் மீதான நடவடிக்கை குறித்து சவுதி உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் அப்துல்காதர் அப் துல் ரகுமான் சவுதி பிரஜையை கொலை செய்த வழக்கில் ஷரியத் கோர்ட் விசாரித்து மரணத்தண்டனை விதித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து அப்துல்காதர் சுப்ரீம் கோர்ட்டில் (ராயல் கோர்ட்) மேன்முறையீடு செய்தார். இது நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து ரியாத் சிறையில் உள்ள அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கொலை நடந்த இடத்தில் அப்துல்காதரின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என கூறப்பட்டுள்ளது. அப்துல்காதரால் கொலை செய்யப்பட்ட நபர் யார் , பெயர் என்ற விபரத்தை உள்துறை வெளியிடவில்லை. (நி)

## 22 பேருடன் பயணித்த ரஷ்ய ஹெலிகொப்டர் மாயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கிழக்கே உள்ள கம்சட்கா தீபகற்பத்தில் ஹெலிகொப்டர் ஒன்று காணாமல் போயுள்ளதாக இன்டபெக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மூன்று பணியாளர்கள் மற்றும் 19 பயணிகளுடன் பயணித்த எம்ஐ-8 என்ற ரஷ்ய ஹெலிகொப்டர் Vachkazhets எரிமலைக்கு அருகே ஒரு தளத்தில் இருந்து பயணித்தபோதே காணமல் போயுள்ளது.

[illegible] இந்த ஹெலிகொப்டர், கம்சட்கா தீபகற்பத்தின் தெற்கில் உள்ள ஒரு ஏரிக்கு அருகில் திடீரென தரையிறங்கியதாக உள்ளூர் அவசர சேவை தெரிவித்துள்ளது.

ஹெலிகொப்டர் மாஸ்கோ மற்றும் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்றதாகவும் ஹெலிகொப்டர் ஏரியில் விழுந்ததாகவும் மாநில செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கம்சட்கா தீபகற்பம் சுற்றுலா பயணிகளிடையே பிரபலமான இடமாக திகழ்கின்றது. இது ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவிற்கு கிழக்கே 6,000 கிமீ (3,728 மைல்கள்) மற்றும் அலாஸ்காவிற்கு மேற்கே சுமார் 2,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

1960 களில் வடிவமைக்கப்பட்ட இரண்டு எஞ்சின்களை கொண்ட இந்த ஹெலிகொப்டர் ரஷ்யாவிலும் அதன் அயல் நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி 16 பேருடன் பயணித்த எம்ஐ-8 ஹெலிகொப்டர் கம்சட்கா தீபகற்பத்தில் அதிகாலையில் விபத்துக்குள்ளானது.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரானை தரிசித்த சஜித் பிரேமதாஸ



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ நேற்று சனிக்கிழமை காலை நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சஜித் பிரேமதாஸ பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றார். (நி-33)

# ஆயரை சந்தித்து ஆசிபெற்றார் சஜித்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குமாக வேண்டியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். (நி-33)

# 'புதுவை நாதம்' இதழுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட புத்தூர் பொது நூலகத்தால் புதுவை நாதம் இதழ் 05 சஞ்சிகைக்கான ஆக்கங்கள் பிரதேச மக்களிடம் கோரப்பட்டுள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த பிரதேசத்துக்குட்பட்டவர்களிடம் கவிதை, கட்டுரை, கதை போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த ஆக்கங்களை கிராம உத்தியோகத்தர்கள் மூலம் உறுதிப்படுத்தி செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நூலகர் பொதுசன நூலகம் வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார். (நி)

# பொருளியல் கருத்தரங்கு

(கரணவாய்)

வடமராட்சி வலயத்திற்கு உட்பட்ட க.பொ.த உயர்தர வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு பொருளியல் பாடத்திற்கான இலவச கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி சிவபாதசுந்தரம் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சி.விஜயகுமார், பிரபல பொருளியல் ஆசிரியர் சி.ஜெயக்குமார் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (நி-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 200-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 210 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150-180 | 250 |
| தக்காளி | 260 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 180 | 200-250 | 200 |
| கோவா | 320 | 250 | 350 | 400 |
| கரட் | 300 | 350 | 350 | 400 |
| பூசணி | 140 | 100 | 50-80 | 100 |
| புடோல் | 120 | 100 | 100-150 | 120 |
| வாழைக்காய் | 250 | 200 | 200-250 | 240 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 120 | 240 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 80 | 100 | 50 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 120 | 100-150 | 200 |
| லீக்ஸ் | 320 | 500 | 400 | 400 |
| பீற்றூட் | 160 | 150 | 150 | 150 |
| கறிமிளகாய் | 650 | 600 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100-150 | 200 |
| போஞ்சி | 550 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 150 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 500 | 200-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 80-120 | 100-130 |
| இராசவள்ளி | 850 | 650 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 300 | -- | 320 |
| முள்ளங்கி | 120 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | 60 | 100 |

# இராசிபலன்

01.09.2024
ஆவணி 16, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முழுவதும்,

ஆயிலியம் முன்னிரவு 11.47மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

நல்லூர் கந்தன் தேர்
சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்

வளவன்




அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்




விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.




இறைவழிபாட்டால் இனிமை சேரும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.




விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட் வகையில் நன்மையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மாற்றங்களால் ஏற்றம் அடைவீர்கள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், காரிய அலைச்சல் சற்று அதிகரிக்கும்.




கடினமான வேலைகளை கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோஷம் கிடைக்கும்.




ஒளிமயமான எதிர்காலம் அமைய உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.




எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.





வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்டு இருந்த காரியம் இன்று கைகூடும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு தலைக்கு [illegible] காலுக்கு செருப்பு.

# விமர்சனங்களை தவிர்த்து நாட்டிற்காக ஒன்றிணைவோம்

## அழைப்பு விடுத்த ஜனாதிபதி



**(கொழும்பு)**

**ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதையோ விமர்சிப்பதையோ தவிர்த்து, நாடு முன்னேறவும் மீண்டு வரவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

குருநாகலில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தனது உரையில், மக்களிடையே ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், "நாங்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளோம், மீண்டும், பொய்யான வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. வரிகள் குறைக்கப்படும் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

இவை எதுவும் வெற்றி பெறாது. வரியைக் குறைத்தால் என்ன ஆகும்? நமது வருவாய் குறையும், இதனால் சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு ஆதரவளிக்காமல் போகும். எனவே, நாடானது மீண்டும் அதே பொருளாதார பிரச்சனைகளை எதிர்கொள்ளும்.

"நாட்டின் பொருளாதாரம் பற்றி பொய் கூறமுடியாது. பொருளாதாரம் பற்றிய பொய்களால் மக்களை ஏமாற்ற முடியாது"

அந்தவகையில், கடந்த காலங்களில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் தவறுகளை இழைத்துள்ளனர்,

இது பாரிய வீழ்ச்சிக்கு வழி வகுத்தது என்பதை ஒப்புக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, இந்த கடந்த கால தவறுகளில் தங்கியிருப்பது அல்லது "ஒருவரை யொருவர் குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக, ஒன்றிணைந்து செயற்படுவோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் வியாபாரம்

## 65 க்யூப் மணல் பறிமுதல்



(கருமபுரம்)

கிளிநொச்சியில் சட்டவிரோதமான முறையில் மணல் வியாபாரம் முன்னெடுக்கப்பட்ட மணல் யாட்டை பொலிஸ் மற்றும் கனிய வள பிரிவினர் இணைந்து மூடியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சட்டவிரோதமான முறையில் மணல் யாட் அமைத்து மணல் வியாபாரத்தில் ஈடுபடுவது தொடர்பில் கிளிநொச்சி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் கடந்த 27.08.2024 அன்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் அனுமதிக்கப்படாத பகுதியில் மணல் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த மணல் யாட்டினை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த மணல் யாட்டினை உடனடியாக மூடியதுடன், அப்பகுதியில் இருந்து 63 க்யூப் மணலினையும் பறிமுதல் செய்தனர். (நி-316)

# தேர்தல் கடமைகளுக்காக குவிக்கப்பட்டுள்ள பொலிஸார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்காக 54,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், 13,000 இற்கும் அதிகமான வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 45 இற்கும் அதிகமான வாக்கு எண்ணும் நிலையங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

சட்டவிரோத சுவரொட்டிகள், கட்அவுட்கள் மற்றும் பதாகைகளை அகற்றுவதற்காக 1500 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதுடன் சட்டவிரோத கட்அவுட்கள் அகற்றப்பட்டும் வருகின்றன.

மேலும் 3200 நடமாடும் வாகனங்கள் தேர்தல் காலத்தில் செயற்படுத்தப்படுவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதிக்கு அருகில் 2 1/2 பரப்பு வெற்றுக் காணி சுற்று மதிலுடன் உடனடி விற்பனைக்கு.

**தொடர்புகளுக்கு:**
**075 410 5230**

(சி-2396)



**அலங்காரா நல்லூரா**

**சிவ சண்முக சிவஞான தேசிகன் திருவடி வாழ்க**
**வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப் பெருங்கருணைக்கடலே**
**அலங்கார வேலா நல்லூரா என எங்கும் அருள் ஒளி முழங்க தேர்வடம்**
**பிடிப்போம் கந்தமலை கிரி ஆகிய சிவ கைலாயத்தில் இடம் பிடிப்போம்**



ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே! தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே அரசே! முக்கட்
பேறு முருகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே! செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே! பிரமஞானம்
வீறுமுகம் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே! ஆனந்த வெள்ளமே! முன்
தேறுமுகப் பெரியவருட் குருவாயென்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே!
**இராமலிங்க சுவாமிகள்.**

பக்தர் கூட்டங்களின் மீது பிரியமுள்ளவனே! நடனம் ஆடவல்ல மயிலை வாகனமாகக் கொண்ட **"அருள் மிகு 'அலங்காரா!- வேலா! நல்லூரா!** எங்கும், எத்திசையும் சித்தர்களும் முனிவர்களும், எங்கும் உள்ள பக்தர்கள், அற்புதம் எனக் கொண்டாடும் முருகனே! எல்லோரும் வாடாத பாமாலையாகிய **"கந்தர் அலங்காரம்"** பாடி, ஓதி அணிவோம்- நாமும் நாக்கால் திருப்புகழ், கந்தர் அநுபூதி பாடிப்பணிவோம், தூய்மை அடைவோம், அமைதியும் ஆன்மீக வழியில் நிற்போம் நம்மையும் முருகன் கரம்பிடித்து உயர்த்துவான் எங்களது **"அலங்காரா வேலவன் நல்லூரான்."** சிவ சண்முக சிவஞான தேசிகன் திருவடிகளை வாழ்த்தி **"அலங்காரா வேலா நல்லூரா"** சித்தர்கள் நடமாடும் திருவீதியில் ஆசார சீலராகவும், சீர் உடையிலும் எம்பெருமான் வடம் பிடிப்போம் கைலாயத்தில் இடம்பிடிப்போம்.

(சி-1094)

**க.கு.க. சிவபாலன் (k.k.k)**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் கவனம் செலுத்துங்கள்

தமிழ் மக்களுக்குத் தீர்வு தேவை என்பதில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் உடன்பாடு கொண்டுள்ளனர்.

ஆனாலும் தீர்வு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதில் தமிழர்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதாவது, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கு எது தீர்வு என்பதில் தான் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

ஆம், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வ தாக இருந்தால், தனித்தமிழீழம் தான் ஒரே வழி என்று கூறிவிடலாம். ஆனால் அது சாத்தியமா? என்றால் இல்லை என்பது தான் அதற்குரிய பதில்.

அவ்வாறாயின், சாத்தியமல்லாத ஒன்றை அடைய நினைப்பது அல்லது அதையே கேட்டு நிற்பது ஓர் இனத்தின் ஆரோக் கியத்திற்கு உகந்ததல்ல என்ற கருத்து நிலை உருவாகிறது.

அவ்வாறாயின், தமிழ் மக்களின் உரிமையை உறுதிசெய்யக் கூடியதும் உடனடிச் சாத்தியமானதுமான தீர்வுத் திட்டம் பற்றி சிந்திப்பது தான் பொருத்தம்.

இருந்தும் தமிழினம் சார்ந்த சில அமைப் புகள் சாத்தியமான தீர்வுத் திட்டம் பற்றி சிந்திப்பது ஏற்புடையதல்ல.

மாறாக, தமிழ் மக்கள் சுதந்திரமாக– அனைத்து உரிமைகளோடும் வாழ்வதற்கு ஏற்றதான தீர்வை சாத்தியமாக்குவது தான் இங்கு அவசியமாகிறது என்கின்றனர்.

இங்குதான் தீர்வு என்ற விடயத்தில் உள்ளக முரண்பாடுகளும் ஒற்றுமையீனங் களும் தலை எடுக்கின்றன.

ஆம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என் பது சிங்கள ஆட்சியாளர்களிடமே உள்ளது. அதே நேரம் தமிழ் மக்களை ஓரங்கட்ட வேண் டும் என்பது தான் அவர்களின் நிலைப்பாடு.

அந்த நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் விடுபட்டு; தமிழ் மக்களுக்கு உரிமையைக் கொடுப்பதாக இருந்தால், அதற்கு உலக நாடுகளின் அழுத்தங்களும் சர்வதேச அமைப்புகளின் தலையீடுகளும் தேவை யாகின்றன.

அதிலும் குறிப்பாகக் கூறுவதாயின், அண்டை நாடான இந்தியாவின் வகிபாகம் இதில் கட்டாயமாகிறது.

காரணம். இந்தியாவைக் கடந்து இல ங்கை விவகாரத்தில் உலகின் எந்த நாடும் தலையிடமாட்டாது என்பது நிதர்சனமான உண்மை.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை அரசு, ஈழத்தமிழர் என்ற இருதரப்பு எல்லையைக் கடந்து உலக நாடு கள் என்ற மூன்றாம் தரப்பின் உள் வருகை தவிர்க்க முடியாததாகிறது.

இங்கு தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் உலக நாடுகளின் நிலைப் பாடு என்ன? என்ற கேள்வி கனதியாகிறது.

ஆம், உலக நாடுகளைப் பொறுத்தவரை இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது படிப்படியாக எட்டப்பட வேண்டும். அதற்குள் விட்டுக்கொடுப்புகளும் ஒற்றுமைப்பாடுகளும் அவசியம் என்பதாக அறியப்படுகிறது.

எனவே இங்குதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களில் யாருடைய தேர்தல் விஞ்ஞாபனம் உலக நாடுகளைத் திருப்திப்படுத்துகிறது என்பது பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

# ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை வகுக்கமாட்டோம்

## தொடர்ந்து வலியுறுத்தும் நாமல்

(கொழும்பு)

**வடக்கில் உள்ள பிரச்சினைகள் தான் தெற்கிலும் உள்ளன, ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை ஒருபோதும் வகுக்க மாட்டோம் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அத்துடன் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவோம் என்றும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பியகம பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய உற்பத்தியாளர்கள், முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவோம், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவோம். தொழிலின்மை பிரச்சினை தற்போது தீவிரமடைந்துள்ளது.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளின் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துவோம். அதற்கான திட்டங்களை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஆரம்பிப்போம். தேசிய மட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஸ்தாபிப்போம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி பொய்யுரைக்க வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்போம், முடியாததை முடியாது என்போம்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒருமித்த தன்மையில் உள்ளன.

அதிகாரப் பகிர்வு, தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தல், இறக்குமதி பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரான கொள்கையை நாங்கள் வகுக்கப் போவதில்லை நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஙி)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி, அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தான இராஜ கோபுர மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிமுல் 8.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஙி)

## படையெடுக்கும் சுற்றுலாப்பயணிகள்

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்தின் முதல் 25 நாட்களில் 143,622 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 27,999 என குறிப்பிடப் பட்டுள்ளது. (ஙி)

## 331 பட்டதாரிகள் சிறைச்சாலையில் பேராசிரியர் வெளியிட்ட தகவல்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 331 பட்டதாரிகள் இருப்பதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். இவர்களில் 66 பேர் சிறை தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்பதுடன், 256 பேர் விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் சிறைச்சாலையில் 185,056 கைதிகள் இருந்துள்ள நிலையில், அவர்களில் 14,952 பேர் உயர்தர கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் எனவும் தெரிவித்தார். (ஙி)

## தேர்தல் முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை கிடைக்கப்பெற்ற தேர்தல் முறைப் பாடுகளின் மொத்த எண்ணிக்கை 1,482 ஆக அதிகரித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, கிடைக்கப் பெற்ற மொத்த முறைப் பாடுகளில் 1,419 முறைப் பாடுகள் தேர்தல் சட்ட விதி மீறல்களுடன் தொடர்புடையது எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஙி)

## யோகக்கலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப் பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறி யின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடை பெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடம் வாடகைக்கு

கிளிநொச்சி நகரில் கனேசபுரம் பகுதியில் A9 வீதியில் இருந்து 100m தூரத்தில் கீழ்த் தளத்தில் இரண்டு அறைகள், இரண்டு பாத்ரூம், சமையலறை, பெரிய ஹோல் இரண்டாம் மாடியில் 75 - 100 பேர் அமரக் கூடிய பெரிய ஹோல், பாத்ரூம், சமையலறை, இரண்டு பக்கமும் அழகிய பல்கனியும் கொண்ட வீடு மற்றும் கார் பார்க், இளைப்பாறும் குடில்கள் கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படும். வாடகை பேசித் தீர்மானிக்கலாம். பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (1809)

**077 531 2937, 075 968 3257**

## பணியாளர்கள் தேவை

இல. 46, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிற்கு

- சமையலாளர் (Chinese Fast Food)
- காசாளர் (Cashier) சிங்களம் தெரிந்திருத்தல்

தகுதியுடைய பணியாளர் இருப்பின் **077 744 2846** எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும். (302)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

யாழ். மயிலிட்டியில் 13 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கரையோர காப்பெட் வீதியிலிருந்து 150m தூரத்தில் உள்ளது. 1 பரப்பு 18 இலட்சம்

தொடர்புகளுக்கு :

**075 521 3533** (2395)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.

PASS in UK A1 Exam.

Exam REGISTRATION CENTER.

ENGLISH *30% Special offer for all the courses*

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna. (1819)

**T.P : 077 780 3970, 074 007 1970**

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

1. பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை (25-35 வயதிற்குட்பட்டவர்கள்)
2. விற்பனையாளர் (25 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)

கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்

வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்

இல. 58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (1803)

**தொ.இல :021 222 4766, 021 222 6806**

## கடை வாடகைக்கு விடப்படும்

இல.08, பரமேஸ்வராச் சந்தி முகப்பில் சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் மாபிள் பதித்த சகல வசதிகளுடன் கூடிய அகலம் 14 அடி நீளம் 40 அடி கொண்ட கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு :

**072 576 5097** (1835)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்போது 9000/= ரூபாவிலிருந்து

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (300)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= Max5Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= |
| 1 Kg றவை | - 282/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 205/= |
| 1 Kg பொன்னி அரிசி | - 275/= |
| 1 Kg கீரி சம்பா | - 240/= |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 760/= |
| 01 Ocean மீன் ரின் | - 360/= ~~500/=~~ |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= ~~105/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3390/= ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= ~~80/=~~ |
| 700 g சுபோஷ மா | - 560/= ~~590/=~~ |

400g Anchor 1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (300)

Happy Supermarket **0777 8080 30**

## சேவை

முதியவர்களை பராமரித்தல் குறைந்த கட்டணத்தில்

077 442 9869 (m)
077 024 2031 (m/w)

## வேலை ஆட்கள் தேவை

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் காலை 8.00 - மாலை 6.00

**077 442 9869**
**077 024 2031** (1832)

## வேலையாட்கள் தேவை

முருகண்டியில் அமைந்துள்ள PPT எனும் உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்

(1834)

**077 386 6250, 077 573 1318**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. முகாமையாளர்
02. காசாளர்
03. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துனர்

(1834)

**077 386 6250, 077 573 1318**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1098)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 6 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1829)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**

## வேலையாள் தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள கடைக்கு கேக் செய்வதில் அனுபவமுள்ள ஆள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு :

**077 654 8459** (1792)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள். (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna. (C-1098)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபத்தில் (ASR WEDDING HALL) உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவப் பதிவுத் திருமணங்கள், முஸ்லீம் நிக்ஹா திருமணம் செய்ய விரும்புவோர்கள். பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவு செய்ய விரும்புவோர்கள் நேரடியாக வரவும். மண்டபத்தை திங்கள் முதல் வெள்ளி வரை 9 மணி முதல் 5 மணி வரை பார்வையிடலாம். (1802)

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்,**

**இல. 542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 1355, 021 222 1356**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அலங்கார...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் இரதோற்சவம் இன்றாகும்.

காலை வசந்தமண்டப் பூஜை இடம் பெற்று முருகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (ம-7)

## யானை தாக்கி...

ஒருவர் நேற்றுப் பிற்பகல் தனது மாடு களை மேய்ச்சல் தரையிலிருந்து அழைத்துச் செல்வதற்காக சென்றி ருந்த வேளையிலேயே காட்டு யானை யால் தாக்குதலுக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாமடுப் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7)

## வரிச்சுமையைக்...

இணங்கி, எதிர்வரும் இரண்டு வரு டங்களில் பொதுமக்களின் மீதான வரிச் சுமையைக் குறைப்பதற்கு உத்தேசித் துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதிய உடன் படிக்கை, மக்களின் வருமான வழி களை அதிகரிப்பது மற்றும் ரூபாயை வலுப்படுத்துவதன் மூலம் நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண் டுள்ளது. அத்துடன் உலக வங்கி மற் றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது.

தற்போது மற்றைய வேட்பாளர்கள் பொருட்களின் விலைகளைக் குறைப் பதாகவும், மானியங்கள் வழங்குவதாக வும் உறுதியளிக்கிறார்கள்.

ஆனால் தாம் அத்தகைய வாக்கு றுதிகளை வழங்கவில்லை. எங்கள் மானியங்கள் மக்களின் வருமான ஆதாரங்களை அதிகரிப்பதையும் உற்பத்தியை அதிகரிப்பதையும் நோக் கமாகக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார். (ம-7)

## வடக்கு மாகாண...

தேர்தல் காரியாலய திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமையால் மாகாணத்திற் குத் தேவையான அதிகாரம் இல்லா மல் உள்ளது.

விரைவில் மாகாண சபைத் தேர் தலை நடத்தி அதனூடாக உறுப்பினர் களை வழங்கி சேவைகளை வழங்கு வோம்.

மேலும் நாம் ஆட்சியைப் பொறுப் பேற்று 24 மாதங்களுக்குள் வறுமை ஒழிப்பு நடவடிக்கையை நாடளாவிய ரீதியாக முன்னெடுப்போம். 24 மாதங் களுக்குள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருபதாயிரம் ரூபாய் என்ற அடிப் படையில் வழங்க நடவடிக்கை எடுப் போம் என்றார். (ம-7,30)

## நாடு முழுவதும்...

குற்றம் தொடர்பில் 727 ஆண்களும் 16 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 12 பேர் பொலிஸ் தடுப்புக் காவலுக்கும் இருவர் புனர் வாழ்வு நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## வாக்குச்சீட்டு...

னிட்டு சுமார் 8000 பேரை பணியில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரண சிங்க கூறினார்.

எதிர்வரும் 02ஆம் திகதி தபால் ஊழியர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்குச் சென்று வாக் குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகளை உரிய முகவரிகளுக்கு கொண்டு செல் லும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

## எரிபொருட்களின்...

துடன், அதன் புதிய விலை 332 ரூபா யாகும்.

379 ரூபாயாக நிலவிய ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றரின் விலை 02 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது டன், அதன் புதிய விலை 337 ரூபா யாகும்.

317 ரூபாயாகக் காணப்பட்ட ஓட்டோ டீசல் லீற்றரின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 307 ரூபாயாகும்.

355 ரூபாயாக நிலவிய லங்கா சுப்பர் டீசல் விலை 03 ரூபாயால் குறைக் கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 352 ரூபாயாகும்.

மண்ணெண்ணெய் விலையில் மாற் றம் செய்யப்படாத நிலையில் ஒரு லீற்றர் 202 ரூபாய்க்கே விற்பனை செய்யப்பட வுள்ளது. (ம-7)

## ஆட்சி மாறினா...

இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஆட்சியாளர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள விரும்பு கின்றார்களே தவிர புதிய வர்த்தகங் களை உருவாக்குவதற்கு விரும்ப வில்லை.

விருப்பமான இடங்களில் வணிகங் களை ஆரம்பிப்பதற்குத் தேசிய மக் கள் சக்தி அரசாங்கம் உதவி செய்யும்.

நாம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு அல்ல, இந்த நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கே வாய்ப்பைக் கோருகி றோம்.

சர்வதேச நாணய நிதியம் ரணிலு டன் எந்த ஒப்பந்தங்களையும் செய்ய வில்லை.

அதன் ஒப்பந் தங்கள் அனைத் தும் இலங்கை அரசுடனே மேற் கொள்ளப்பட் டுள்ளது.

இதனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வ தேச நாணய நிதி யத்துடனான உடன்படிக்கை களுக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படாது.

எனவே, தாம் இல்லை என் றால் நாடு மீண் டும் பாதாளத்துக் குச் சென்றுவிடும் என ரணில் கூறு வது முற்றிலும் பொய்யான கருத் தாகும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதி பதி வேட்பாளர் அநுர குமார திஸா நாயக்க தெரிவித் துள்ளார். (ம-7)

## மேலும்...

சமாதானம், நீதிக் கான இலங்கை பிரசாரம் ஆகிய 7 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையில் அங்கம் வகிக்கும் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் கண்காணிப்பாளர் நாடுகளுக்குக் கூட்டுக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளன. அக்கடிதத் தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

2021 இல் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம் மற்றும் 2022 இல் காலநீடிப்பு செய்யப்பட்ட 51/1 தீர்மானத்தின் ஊடாக நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக் கூறல் செயற்றிட்டம் தொடர்பில் ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப் பட்டிருக்கும் ஆணையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் 57ஆவது கூட்டத்தொடரின்போது குறைந்தபட்சம் மேலும் 2 ஆண்டு களுக்கு நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உங்களிடம் வலியுறுத்து கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கம் 2009ஆம் ஆண்டு தோற்கடிக்கப் பட்டு தற்போது 15 ஆண்டுகள் கடந் திருக்கின்றன. இருப்பினும் 26 வருட கால உள்நாட்டுப்போரின்போது படை யினரால் சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பாக இழைக்கப்பட்ட மிகமோச மான குற்றங்கள் தொடர்பில் இன்ன மும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடு வழங்கல் என்பன உறுதிசெய்யப்பட வில்லை.

இதுவரை காலமும் இலங்கை அர சாங்கம் அதன் மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் தொடர்பிலோ அல்லது கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதிலோ எவ்வித முன்னேற்றத்தையும் காண பிக்கவில்லை என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 5582
Y 9 6 9 3 7 6
அத சம்பத
Y 9 3 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 0157
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1612
A 21 35 66 75 A
Double Chance 09744

மெகா பவர்
திகதி 31/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1930
M 24 09 34 35 74
Double Chance 13126

லக்கி 7 VIP
திகதி 2024.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 0408
W 0 2 9 4 7 8 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3824
சீட்டிழுப்பு திகதி 31.08.2024
X 38 47 53 66
X 21287
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 0891
மகரம் 05 24 28 49 மகரம்
02546 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி டன சம்பத
31.08.2024 வெற்றி வாரம் 290 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து H
4 0 0 8 0 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,139,240.00
33220
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2556 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 31.08.2024 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 18 49 56 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,095,281.60
DLB

சனிதா
திகதி 2024.08.31 வெற்றி வாரம் 4717
03 07 24 28 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,576,131.60
ரூ. 100,000/- 42650
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4268 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.31 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 30 40 47 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,168,087.60
172506
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 06 09 10 37 50
சுப்பர் இலக்கம்
1732
சிவப்பு
31.08.2024
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 542,230,447.40
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2382
சீட்டிழுப்பு திகதி: 2024.08.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,196,255.20
அட கோடிபதி ADA KOTIPATHI
02 09 13 61 G
ரூ. 100,000/- 151547
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேசம் உலகளாவிய பிரஜை



இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய பல்வேறு இனத்தவர்களும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய பல்வேறு சமயத்தவர்களும் வாழ்கின்ற நாடாகும். இந்த பன்மைத்துவத்தின் காரணமாக இயல்பாகவே நிலவுகின்ற பல் கலாசாரத்தினுள் ஒவ்வொருவருடைய இருப்பினை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் அவற்றுக்கு மதிப்பளித்து வாழ்வது நாட்டின் நலனுக்கும் சமூக ஒற்றுமைக்கும் அத்தியாவசியமானதாகும். எனினும் வரலாற்றில் அதற்காக எமக்கு கிடைத்த பல்வேறான அரிய பல சந்தர்ப்பங்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் தோல்விகண்டுள்ளோம். அதிகாரத்தைக் கைப்பற்றும் மற்றும் அதனை தக்கவைத்துக்கொள்ளும் குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்கங்களின் காரணமாக இனத்துவ மற்றும் சமயரீதியாக மக்களுக்கிடையில் பரஸ்பர சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியதன் விளைவாக 30 வருடகால கொடூரயுத்தித்திற்கு நாம் முகம்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். அந்த யுத்தத்தின் வடுக்களும் வேதனைமிகுந்த விளைவுகளும் தற்பொழுதும் இலங்கைச் சமூகத்தினுள் எச்சங்களாக மிஞ்சியிருக்கின்றன. எனவே, இனம், மொழி, மதம், சாதி, பால்நிலை என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாத மேற்குறித்த பன்மைத்துவ அடையாளங்களை மதிக்கின்ற மற்றும் அவற்றின் இருப்பினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்ற இலங்கை எனும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய ஒற்றுமையை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

## கோட்பாடுகள்

- சகல இனத்தவர்களினதும் அரசியல் பங்கேற்பு
- இனம், மொழி, மதம், சாதி அல்லது பால்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு பிரஜையும் / மக்கட் சமூகமும் அவமதிப்பிற்கோ, துன்புறுத்தலுக்கோ, அழுத்தத்திற்கோ அல்லது அநீதிக்கோ ஆளாகாதிருத்தல்.
- சகல இனத்தவர்களினதும் மற்றும் சமயக் குழுக்களினதும் பாதுகாப்பு மற்றும் பரஸ்ப புரிதல், நம்பிக்கை மற்றும் உரிமைகள்.
- இனவாத, சாதிஅடிப்படையில் மற்றும் மதவாதக் கருத்துக்களின் அடிப்படையில் பிரிக்கப்படாத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்த இலங்கை தேசத்தவர்.

## செயற்பாடுகள்

- 2015-2019 புதிய அரசிலமைப்பொன்றினை தயாரிப்பதற்காக கடைப்பிடித்த செயற்பாங்கினை துரிதமாக நிறைவு செய்து சமத்தவம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளுராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசியலமைப் பொன்றினை தயாரித்தல்.
- ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களையும் ஆட்சியில் தொடர்புபடுத்தக்கூடியவாறு ஒவ்வொர் உள்ளுராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை உறுதிசெய்தல்.
- தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்று உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்திற்குள் நடாத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்ட பாரபட்சத்திற்கு எதிரான ஆணைக்குழு ஒன்றினைத் (Commission Against Discrimination) தாபித்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மெசியல் படுகொலைகள், காணாமல்போகச் செய்வித்தல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றி புலன்விசாரணை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுதல்.
- இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டினை விரிவாக்குதல்.
- மதங்களுக்கிடையிலான மோதல்களை தீர்த்துவைப்பதற்கான அனைத்து மதத் தலைவர்களையும் மதம்சார்ந்த கல்விமான்களினதும் உள்ளடக்கத்துடனான சர்வ மதப் பேரவை ஒன்றைத் தாபித்தல்.
- உலக மதங்கள் பற்றிய சமநிலை வாய்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
- தேசிய மற்றும் மத ஐக்கியத்திற்கான கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.
- அரசியல் கைதிகளை விடுதலை செய்தலும் அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துதல்
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உள்ளிட்ட அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்த மக்களினதும் சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தினை முறைமைப்படுத்துதல்.
- கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அரசியல் அழுத்தங்களின்றி சகல இனத்தவர்களுக்கும் நியாயமானவகையில் கிடைக்கக் கூடியதாக தகைமைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதனை உறுதிசெய்தல்.
- மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் யுத்த-விதவைகள், அனாதைகள் மற்றும் மனஅழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மானிய உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு ஒன்றினூடாக நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்.
- இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.
- அரசியலமைப்பின் 16ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்துதல்.
- அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுலாக்குதல்.
- தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச அலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.
- 2023. 10. 15 ஆந் திகதி கொண்டதாக தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹற்றன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையகத் தமிழ் மக்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மலையகத் தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்று வகையில் அதிகரித்தல். மக்கள் கௌரவமான வருமானத்தினைப் பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.
- வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாக தீர்த்து, அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்குதல்.

**வளமான நாடு - அழகான வாழ்க்கை**

අනුර කුමාර දිසානායක

அநுர குமார திசாநாயக்க

Anura Kumara Dissanayake

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org